# ஞானசமபநதம

மலர் 13 ] விஜய ஹு தைமீ 10—2—54 [இதழ் 3



பட விளக்கம் 60-வது பக்கம்.

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.

# திருமூலர்—திருமந்திரம்

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு எண் 76. கிடைக்குமிடம்:- திருவாவடுதுறை ஆதீனம், நாரசிங்கன்பேட்டை வழி.

இந்த வெளியீடு திருமந்திரத்தில் இருந்து பொறுக்கி எடுக்கப் பெற்ற 102 பாடல்களுக்குக் கிடைத்த சிறந்த உரைப்பகுதியாகும். உரையாசிரியர் கன்னடியத் திருமேனி கம்பளச்சித்தர். இவர் வீர சைவர் என்பது உரைக்குறிப்பிற் காணப்பெறும் உவமைகளால் அறியப்படும். திருமந்திரம் ஒரு சம்பிரதாய அநுபவநூல். இதனை மக்கள் அனைவரும் உணர்தலும்—ஒழுகுதலும் முடியாத காரியம். அந்தந்த பக்குவர்கள் அவ்வந்நிலையை உணர்வராயின் அவர்களுக்குப் பயன்படும் அன்றிச் சிற்றறிவினரும்—மற்றின்பம் வேண்டுவோரும் சில நுணுக்கங்களை உணர்வாராயின் தாங்கருதும் இன்பிற்கும் அதனைத் துணைக்கொண்டு ஆன்றோராசாரம் அழிப்பர். அதற்காகவே திருமூலர் பெருமான் சில விஷயங்களை மறைமுகமாகவும்—பரியாய மாகவும்—உவமைகளாகவும் உரைத்தருளுவர். இவற்றிற்கு எல்லாம் அநுபவிகள் உரை அவசியம் என்பதனை இவ்வெளியீடு நன்கு புலப் படுத்துகிறது. கம்பளசித்தர் உரையுடன் ஆதீன வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய விளக்கம் மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் இருக்கிறது. இந்த இரண்டு மூன்றாண்டு களுக்குள் 72-க்கு மேற்பட்ட சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து வெளியிட்ட திருவாவடுதுறை ஆதீனம் இருபத்தோராவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் திருவருட் பெருக்கினைத் தமிழுலகம் பெரிதுப்பாராட்ட—தோத்தரிக்கக் கடமைப் பட்டுள்ளது.

இவ்வெளியீடு நல்ல வழுவழுப்பான ஆர்ட்காகிதத்தில் அழகான எழுத்தால் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய நிலையில் அமைந் திருப்பது இதற்கு உள்ள தனியழகு. திருவாவடுதுறைக் கோயிலும் படரரசின் கீழிருக்கும் திருமூலநாதர் திருவுருவம், முகப்பை அலங் கரிக்கின்றன. அடுத்து திருமூலநாதர் சந்தனக்காப்பலங்காரத்துடன் எழுந்தருளியிருக்கிறார். அதனையடுத்து "தெளிவு குருவின் திருமேனி காண்டல்" என்ற திருமந்திர வாக்கிற்கு ஏற்ப ஆதி குருநாதராகிய நமச்சிவாய மூர்த்திகளைக் கும்பிட்ட திருக்கரத்துடன் இருபத்தோ ராவது ஞானசாரிய மூர்த்திகளின் திருவுருவம் இருக்கின்றது. எல்லா வகையிலும் இப்புத்தகம் மிக அழகாக அமைந்திருப்பது தமிழ்நாடு செய்த தவப்பயன் என்றே கொள்ளத்தகும்.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 13] விஜயஸு தைமீ 10—2—54. [இதழ் 3

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினுய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## கடமையும் - உரிமையும்.

மக்கள் ஒவ்வொருவரும் உரிமைக்காகப் போராடுகிருர்கள். உரிமை என்பது என்ன? கடமையின் கனிவாகிய பயன்தானே! கடமையைச் சரிவரப் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்ருத ஒருவன் உரிமைக்குப் போராடலாமா? உரிமை - தானே உறுவது. கடமை - காலந்தவருமல் கருவி கரணங்களைக்கொண்டு செயல் முறையில் நிறைவேற்றுவது. உழவன் கடமை உழுது பயிர் செய்தல், எருதின் கடமை ஏரிழுத்தலும், வண்டியிழுத்தலும், கொல்லன் கடமை இரும்பைக் கொண்டு சிதருமல் சிதையாமல் உதவிக்கான பொருள்களை உருவாக்குதல். தலைவன் கடமை, கடமையைக் கருத்தோடு நிறைவேற்றியவனுடைய உரிமையைப் பாதுகாத்தல். இந்த உரிமையும் கடமையும் அறிவுடை மக்கள் அனைவரிடமும் கலந்துதான் இருக்கின்றன.

கடமையைச் செய்யத் தவறியவன் உரிமைக்காக உதவியை நாடுகிறான். கடமையே உரிமைக்கு உதவி என ஒவ்வொருவரும் மனம் கொள்ளுதல் வேண்டும்.

சூரியன், சந்திரன், காற்று இவை கடமையில் தவறுவ தில்லை. காலமும் மீறுவதில்லை. மனிதனும் அவற்றோடொத்து இயங்கவேண்டும். காலக்கருவியாகிய கதிரவனைப் படைத்துத் தந்த கடவுட் கருத்தும் அதுதான். உரிமை கடமையை அறிந்து நிறைவேற்றும் உழைப்பினளவே; அதனை அளிப் பவன் கடமையைச்செய்தலால் எய்தும்பயனை அடைபவனே. அவன் மனவிரிவினளவே உரிமை. ஆதலால் உரிமையை விரும்பும் ஒவ்வொருவரும் கடமையைத் தவறாமல் செய்து கடமையைக் கொள்பவனுடைய மனத்தைக் கனிவிப்பதே சிறந்த வழி.

## திருமந்திர மாநாடு:-

திருமந்திரம் ஏதோ பாராயண நூலாக இதுவரையில் பயிலப்பெற்று வந்தது. அதில் ஆய்வுந்தோய்வும் ஏற்பட ஊக்கமும் ஆக்கமும் தேவை

அன்று ஞானப்பால்உண்ட பிள்ளையாருக்கு, தன் இடத்தை மணம் வீசித்தெரிவித்துக் கொண்ட திருமந்திரம், இன்றும் தனது பொருளாழத்தை உலகவரறிய திருவாவடுதுறை வாயிலாகவே வெளிவந்தது சிறந்ததிருவருட்குறிப்பு. அதிலும் படரரசின் கீழிருந்து மந்திரப் பெருமையை உலகவர்க்கு உணர்த்திய திருமூலர் திருவருட்பிரகாசம் உள்ள இடத் திலேயே இச்சிந்தனை எழுந்தது இன்னும் மேலான காரியம். இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து திருமந்திர மாநாட்டை நான்கு நாட்கள் நடத்தியருளிய திருவாவடுதுறை ஆதீனம், இருபத்தோராவது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்களுக்குத் தமிழுலகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது. மந்திர நெறியில் செந்தமிழ் நாடு வளர்க!

திருவாவடுதுறை ஆதீன முதற்குரவர்,

ஸ்ரீ-ல-ஸ்ரீ முக்திபஞ்சாக்கர தேசிக மூர்த்திகள் திருமுன்,



இருபத்தொன்றாவது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

# Extracts from the Visitor's Book of
# Sri Panchanathiswaraswamy temple,
## Thiruvaiyaru, Tanjore Taluk & District.

I was happy to have been able to visit the far famed Panchanathiswarar temple today when I come to partake in the celebrations in connection with the 107th anniversary of the passing of the great sage Thyagarajar. I was very pleased to have had the opportunity of paying my homage at the shrine of the Lord Shiva and his famous spouse Parvathi known here as Dharmasamvardhini. The temple is well looked after, and every thing is clean and orderly. I also met Shri Meyyappa Chettiar there, who is doing so much to renovate the temple and helping to make it fresh again preserving the old style and form. He is worthy of our gratitude. I congratulate all in charge of the temple and thank them for their warm welcome to me and my party consisting of my daughter Sudharati, daughter-in-law Kamini and others. The Chief Justice Shri Rajamannar was also with me; and we were all happy with all we saw.

(Sd.) SEVASHRAMA,
Benaras. (U. P.)

(Sd.) SRI PRAKASA,
(Gevernor of Madras.)
January 22, 1954.

I Visited the temple today. The premises are all kept clean and neat and the Pujas are being performed very satisfactorily.

(Sd.) NATARAJAN,
Divisional Engineer (High Ways)
Tanjore West Dn. 18—1—54.

While offering worship of the several shrines I was impressed with the cleanlines of the pre-cints and the sincerity and devotion with which the pujas are performed. I congratulate the temple authorities in this splendid upkeep of the temple.

(Sd.) S. NAGABUSHANAM,
Retired Chief Engineer,
Madras port Trust 23—1—54.

(Sd.) PADMANABAN,
Chief Engineer, P. W. D.
Madras, 23—1—54.

154

# கந்தபுராணக் கவிச் சித்திரம்

ச. த.

**"பெண்ணைப் போற்றி வள; ஆணை அடித்து வள"**

என்பது பழமொழி; இமவானுக்கு ஒரே ஆனந்தம். மேனைக்கோ சொல்லவேண்டியதில்லை. குழந்தையைச் செல்லமாக வளர்த்தார்கள். தொட்டிலிலும் கட்டிலிலும் தோள் மேலும் தாள்மேலுமாக வளர்த்தனர். அம்மை வளர்பிறை போல ஒளியுந்திருவும் பொங்க வளர்ந்தனள். உலகம் எல்லாம் பெற்று வளர்க்கும் ஒருத்தி மேனைவளர்க்க வளர்ந் தாள் என்பது ஒருவிந்தை.

**ஐந்தாண்டு ஆயிற்று:**

ஐந்து வயதில் நமக்கு எல்லாம்; அறிவு நிரம்புமா? குழலை திருந்துமா? விளையாட்டைத் தவிர விநயமான காரியங்கள் நிகழுமா? அப்படி இருக்க அம்மைக்கு ஐந் தாண்டு நிரம்பியதும் தன்னருமைத் தந்தையைப் பார்த் துக்கேட்கிறுர், "தேவர்கள் தந்தையை மணந்து கொள்ளக் கடுந்தவம் புரியப்போகின்றேன் கன்னிப்பெண்கள் சிலரைத் துணையாக அனுப்புக, இமயமலையில் ஒருபக்கம் என்தவத் திற்குரியது" என்று,

அரசன்: அம்மா தங்கள் வயது என்ன. உடலின் மென்மைக்குத் தவமாதாங்கும். வேண்டவே வேண்டாம்.

அம்மை: (சிரித்துக்கொண்டே) அனைவரையும் காப் பவன் கடவுள். ஒருவரை ஒருவர் காப்பாற்றுவது என்பதும் நான் காப்பாற்றுவேன் என்பதும் ஆகக்கூடிய காரியமா? இந்தவயதில் இவ்வளவுபெரிய காரியத்தைச் செய்யப்போகி றேன் என்று நான் சொன்னதும் கூட அவன் அருளே! இதனைக் கச்சியப்பர் காட்டுகிறுர் பாருங்கள்.

ஈசனே காப்பன் அல்லால் யாரையும் பிறரார் தம்மால்
ஆசறப் போற்றலாகாது அதுதுணிவு ஆகும் ஈண்டுப்
பேசிய திறனும் அன்னேன் பேரருள் மருதி என்ன
நேசமோடு இயைந்திட்டு அன்னை நினைந்த நோன்பு.
இயற்றுக என்றார்.

(ஆசு அற - குற்றம் நீங்க; மருதி - மறுக்காதே; நோன்பு - தவம்;)

ஆகையால் பார் அவனை ஒழித்துக்கட்டிவிடுகிறேன்; அல்லது பார் அவனைத் தூக்கி உச்சியில்வைக்கிறேன் என்று சொல்லலாம்; செய்ய முடியுமா? பரமசிவன் விரும்பினால் எல்லாம் ஆகும். எனக்கு இந்த எண்ணம் உண்டாதற்கும் அவனேகாரணம்.

அரசன்: அப்படியா? அம்மா உன் இஷ்டம்.

பின்னர்க் கடுமையான உத்தரவு: மலையின் ஒருபால் அம்மைசொன்ன இடத்தில் தவச்சாலை உருவாயிற்று. அங்கே சூழ அமைதி. எங்கும் தெய்வமணம். இவ்விடத்தில் துணை செல்லும் கன்னியரைத் தேடுகிறான் அரசன்.

**பாரம்பரைக்குணம்:**

மனிதரைத்தேடுவது சுலபமல்ல. பசுப்போல இருந்து புலி போலப்பாய்வார் உண்டு. பரம்பரையைப் பார்க்கவேண்டும். அதுபோல மன்னன் இலேசில் துணை தேடிவிடவில்லை. தங்கள் சுற்றத்திலேயே தவத்தாற் பிறந்த கன்னியர் பலரைத் தேர்ந்து அம்மைக்குத் துணையனுப்பினான்.

மன்னனும் இயைந்து பின்னர் மால்வரை ஒருசார்தன்னில்
அன்னமென் நடையினாளுக்கு அருந்தவச் சாலைஆற்றித்
தன்னுறு கிளைஞர் தம்பால் தவத்தினால் வந்தபான்மைக்
கன்னியர் பலரைக்கூவிக் கௌரிபால் ஆகச்செய்தான்.

(இளைஞர் - சுற்றத்தார்; பான்மை - குணம்; தன்மையுமாம்; கௌரி - பார்வதி)

**கடுந்தவம் :**

கச்சியப்பருக்கு அம்மையின் மேன்மை அகத்தைக் குழைத்து விட்டது. அம்மை அருந்தவத்தை அப்படியே படம் எடுத்துக்காட்ட மனம் வரவில்லை. "மிக்க தவத்தினை இழைக்கல் உற்றாள்" என்ற அளவில் விட்டார். காளி தாஸரோ, நாற்புறமும் தீயைச் சூழ அமைத்தாள். மேலே கடும் வெயில் காய்கிறது. நடுவிலே நின்று அம்மை தவஞ் செய்கிறாள். விழித்தகண் கொட்டாமல் வெயிலையே நோக்குவதால் கண் இமைகளில் நீர்தேங்கி இருக்கின்றது. வழிகின்றது, கன்னங்களின் வழியாக உதட்டில் ஒழுகி, தனங்களில் மோதிச் சிதறித் துளியாகிறது. என்று கவிதை யாக்குகிறார்.



15

# ஆன்மா

புலவர், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியார்.
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்

(முதல் இதழின் தொடர்ச்சி)

ஆன்மா உடம்பே, உடம்பினும் வேருக ஆன்மா ஒன்றில்லை என்பாரைத் தருக்கநூலார் மறுத்துரைக்கும் உண்மையையும் இங்குணர்தல் நன்று. "சரீரமே ஆன்மா என்பார்க்குக், கைகால்முதலிய சரீரம் நசித்தலால், ஆன்மாவும் நசித்ததெனல்வேண்டும் ஆகலின், சரீரம் ஆன்மா அன்று" (தருக்க சங்கிரக தீபிகை). உடம்பில் ஒவ்வோருறுப்பும் சிற்சில வுறுப்பும் உறுப்பியும் ஆக அழிவடைகின்றன. உடம்பு அழியும்போது அவ்வுடம்பினுள் இருந்த ஆன்மாவும் அழிவதில்லை. உடம்பே ஆன்மா ஆயின் உடம்பழிய ஆன்மா அழிதல்வேண்டும். உடம்பழிவதே ஆன்மாவின் அழிவு என்று முடியும். உடலுறுப்புக்கள் அழிய அழிய ஆன்மாவும் அழிந்து வருவதாகும். அவ்வாறில்லாமையால், உடம்பு வேறு ஆன்மாவேறு என்பது வெற்றவெளி. உடம்பிற்கு வளர்ச்சியும் தளர்ச்சியும் உள. காலவரையறை உண்டு. 'நெருநல் உளனொருவன் இன்றில்லை' என்பது உடம்பு பற்றியதே. பிணக்கிடையில் உணர்வில்லை.

இந்திரியங்களே ஆன்மா என்பதும் பொருந்தாது. குடத்தினைப் பார்த்தது கண்ணிந்திரியம். அதனைத் தொட்டது துவக்கு (மெய்) இந்திரியம். கண்ணிந்திரியம் ஆன்மா ஆனல், 'கண்டேன்' என்னும் ஒருணர்ச்சிமட்டும் ஏற்படல்வேண்டும். குடத்தைத் 'தொட்டேன்' என்னும் உணர்ச்சி ஏற்படுவது கண்ணிந்திரியத்தாலன்று; மெய் ஆகிய இந்திரியத்தால் ஆம். 'குடத்தைக் கண்டயானே இப்பொழுது அதனைத் தீண்டினேன்' என்னும் தொடர்ச்சியறிவு ஏற்படுகின்றது

படலால், கண்ணுற்கண்டதும் கையால் தீண்டியதும் ஒன்று யிருந்தாலன்றி அத்தொடர்ச்சியறிவு ஏற்பட வழியில்லை. அதனால், கண்ணினும் மெய்யினும் வேருக ஆன்மா இருத்தல் விளங்கும். அவ்வான்மா, முன் கண்ணுற் கண்ட குடத்தைப் பின் கையால் தீண்டி, காண்டல் தீண்டல் இரண்டும்தொடர்ச்சி யாக நிகழ்தல் பொருந்தும். அவ்வாறு உணர்வனவும் அவ் விந்திரியங்களே என்றுலோ, அவ்விந்திரியங்கள் தம்தம் விடயங்களை வேறு வேறு கண்டறியுமே அன்றி, இத்தொழிற் பாடு நம்மால் ஆகின்றது என்றும் அறியமாட்டாத சடங்கள் ஆதலின், சித்தாகிய ஆன்மா வேறு இந்திரியங்கள் வேறு என்று அறியலாம்.

இந்திரியங்கள் கெடுதல் கண்கூடு. முத்தன் முனியனைப் பார்த்து நெடுங்காலம் ஆகிவிட்டது. மீண்டும் ஒருகால் இருவரும் சந்தித்தனர். முத்தன் முனியனைப் பார்த்து, "என்னைத் தெரியுதா" என்றுன். முனியன் உடனே, "முத்தன்தானே" என்றுன். முத்தனே, என்ன முனியா, கண்குருடாயிருந்தும் என்னைத் தெரிந்து கொண்டதெப்படி? என்றுன். கண் குருடானலும் நான் குருடாகவில்லையே. கண்ணுள்ளபோது உன்னைப் பார்த்தும் உன்பேச்சைக் கேட்டும் உற்றஞானம், அக்கண்போற் குருடும் கேட்ட காது செவிடாதல் போலச் செவிடும் ஆதல் உண்டோ? அந்த ஞானம் அநுபவித்தது. அந்த அநுபவத்தால் நினைப்பு உண்டாயிற்று. அந்த நினைப்பால்தான் உன் குரலைக்கேட்ட தும் முத்தன் என்று உணர்ந்து கொண்டேன்" என்றுன். இத்தகைய அநுபவம் எல்லார்க்கும் உண்டு. இதனால், இந்திரியங்கள் கெட்டாலும் ஆன்மா, கெடுவதில்லை. கெட்ட இந்திரியங்களின் வேருக ஆன்மா இருந்து, முன் இந்திரியங் களாற் பெற்ற அநுபவத்தைப் பின் நினைப்பது விளங்கும்.

அன்றியும், இந்திரியங்கள் எல்லாருடம்பிலும் உள்ளன, இந்திரியங்களே ஆன்மா ஆனல், ஒருவனது அநுபவத்தை மற்றொருவனும் ஒட்டி உணர்தல் வேண்டும். அவ்வாறு உணர்தல் இல்லையே! அதனாலும் இந்திரியம் ஆன்மா அன்று என்று தெரிகின்றது.

மனுதியின் வேறு ஆன்மா. மனுதியும் அணுவும் ஞானத்தைப்போலப் பிரத்தியக்ஷமன்று, பிரத்தியக்ஷஞானம் அப்பிரத்தியக்ஷமாகிய மனத்திலிராது, இருந்தால், ஞானமும் அப்பிரத்தியக்ஷம் எனப்படும். மனம் மகத்தன்று, அணு பரிமாணமுடையது. மனத்தில் பூரண ஞானம் ஏககாலத்தில் ஏற்படாததால் அது நிச்சயமாயிற்று. மனத்தினியற்கை ஏகதேசமேயன்றிப் பிராயிகமன்று. சதாவதானம் சகச்சிராவதானம் முதலியவை விரைவில் நடத்தல்பற்றி ஏககாலத்தில் நடப்பதுபோலத்தோன்றும். உண்மையில், காலத்தால் இடையீடுபடுதல் அறிஞர்க்கு விளங்கும்.

ஞானத்தின் வேறு ஆன்மா என்பர் நையாயிகர். ஞானம் குணம். குணியைவிட்டுக் குணம் தனித்திராது. ஞானத்திற்குப் பற்றுக்கோடு ஒன்று வேண்டும். ஞானம் (அறிவு) ஞாதுரு (அறிஞன்) ஞேயம் (அறியப்படுபொருள்) மூன்றும் வெவ்வேருயிருத்தலின், ஞானமே ஆன்மா அன்று. உலக வியவகாரம் அப்படியே இருக்கின்றது. (இவ்வளவும் நையாயிகர் கொள்கை)

தலைமாத்திரமாய் நிற்கும் இராகுவை இராகுவினது தலை என்று வழங்குவது அபேதம்பற்றியேயாகும். அவ்வாறே "எனதுடல்" என்று அபேதம் பற்றி வழங்கியதெனலாம்.

'எனதுடல்' என்பதில், 'எனது' என்னுஞ் சொல்லால் குறிக்கப்படுவது ஒன்றும் 'உடல்' என்னும் சொல்லால் குறிக்கப்படுவது ஒன்றும் ஆக இரண்டு உண்டு. அவ்விரண்டனுள், உடல் உடைமையாகும். அதைஉடையதே மற்ருென்று. உடையதும் உடைமையும் ஆகிய இரண்டும் ஒன்ருகா. உடல்வேறு, அவ்வுடலை எனதென்ற ஆன்மா வேறு. இவ்வாறு ஆரும் வேற்றுமைப் பிறிதின்கிழமைப் பொருளில் கூறும் "எனதுடல்" என்பதும் "இராகுவினது தலை" என்பதும் ஒன்ருகா.

இராகுவினது தலை என்றாற்போல்வன சிறுபான்மை வழக்கம். அங்கு ஒற்றுமை (அபேத)ப்பொருள் கொள்ளுதல் பொருந்தும். எனதுடல், என் கை, என் கால், என் கண், என் காது, என் பொறி, என் பிராணன், என் **அறிவு** எனப் பலவற்றையும் பெரும்பாலும் உலகத்தில் வழங்கக் காண்கின்றோம். இப்பெருவழக்கம் பிறிதின்கிழமைப் பொருளிலேயே வரும். வரவே, அவ்வாறு கூறிக்கொண்டு நிற்கும் பொருள் வேறொன்று உண்டு என்பது பெறப்படும். அதுவே ஆன்மா.

**என்னறிவு** என்பதில், பாசஞானத்தை அறிவென்றதால், நையாயிகர் கூற்று அவ்வளவிற் பொருந்தும். பசுஞானத்தைப் பசுக்கள் தனித்தனி என்னறிவு என்று கூறிக்கொள்வதற்குத் தனுகரணாதிகள் கூடுதல் வேண்டும். கூடின் பாசஞானம் கலந்துவிடுகின்றது. தனித்த பசுஞானம் பாசக்கலப்புள்ள காலத்தில் தோன்றாது. அந்த ஞானத்திற்கு ஆன்மா வேறு என்பது இங்குப் பொருந்தாது. இதை நையாயிகரும் அறியார். அதனால், நையாயிகர் கூற்று அதை மறுத்திடும் அளவு மதிப்புடையதன்று. (சிவஞானசித்தியார் 293, 294, 295. பார்க்க.)

அடுத்த கட்டுரையில், வெவ்வேறு மதத்தவர் கொள்கைகளையும் அவற்றிற்கு உரிய மறுப்புக்களையும் காணலாம்.

(தொடரும்)

# சுவைவிளக்கம்

வித்துவான், திரு. நா. பார்த்தசாரதி, மதுரை.

(தொடர்ச்சி)

இதுகாறும் தொகைநிலையான் ஒன்றாகிய மெய்ப்பாடும் சுவையும் வேறென்பார்க்கு அவை ஒன்றாவான் செல்லுமாறுரைக்கப்பட்டது. இனி ஆசிரியர் விதந்தோதிய சுவைகள் இவையிவையிற்றின்மேல் நிகழும் என அவரே வகைப்படுத்திப் பொருளுரிமை கூறுகின்றாரன்றே? அவையிற்றை விளக்க முற்படுவோம். முதல் எண்ணு முறைமைக்கண் நின்றது, நகைச்சுவை. அதற்கு ஆசிரியர் கூறும் பொருளுரிமை நான்கு.

> "எள்ளல் இளமை பேதைமை மடனென்
> றுள்ளப் பட்ட நகைநான் கென்ப"

(மெய்ப்பாட்டியல் 4.)

ஆசிரியர் இங்ஙனம் பொருட்பகுதி செய்துகொண்டார் எனினும், குறிப்பு, சத்துவம், சுவை என்னும் ஏனைய மூன்று பாகுபாடுகளும் இந்நான்கனையும் அடிப்படைக்கொண்டு நிகழுமென்னும் சுவைக்கப்படுபொருளின் இன்றியமையாமை நோக்கி வைத்தாரேயன்றி அம்மூன்றின் தொடர்பு மறந்தொழிந்தாரல்லர். என்னை? அவை மூன்றும் இந்நான்கனுள் யாதானும் ஒன்றுள்வழியன்றே உறற்பாலன என்பது நோக்கினாராகலின். என்போலவெனிற் புளிங்கனி தின்றானொருவற்குத் தின்றானபோதன்றே அத்தின்ற சுவையும் குறிப்பும் அதற்குரிய சத்துவமுந்தோன்றும். தின்னாக்கால் தோன்றாதன்றே; அதுபோல என்க. பேராசிரியர் இதனை, "இவை நான்கும் பொருளாகிச் சத்துவமும் குறிப்பும் சுவையும் என்னும் மூன்றற்கும் முதற்கண்ணவாகலான் மூன்றனையும் அடக்கிப் பொருட்பகுதியான் அவற்றைக் கூறுகின்றவாறு

இது என்பது" என விளக்குவர். இனி இவை நான்கும் நிகழ்படுநெறியானும் சுவைதருமுறையானும் ஒவ்வொன்றிரண்டாகி எட்டாகுவனவாம். அவை எட்டாமாறும் அதற்கெடுத்துக்காட்டும் இனிக்காட்டுதல் தகும்.

எள்ளல் என்பது இருநிலைக்களனிற் பிறந்து நிகழ்படுநெறியாற் றன் சுவை புலப்படுத்தும். தான் பிறரை எள்ளி அவ்வெள்ளலால் நகுதலும், பிறரால் தான் எள்ளப்பட்ட வழித் தன்கட்படும் நகுதலும் என அது இருவகைத்து. இளமை, பேதைமை, மடமை என்னும் முப்பொருளுமப் பெற்றியால் இரண்டு இரண்டு வகைகளையுடைய. இவைகளை விளக்கும் பேராசிரியருரைப் பகுதியில் பின்னிரண்டன் விளக்கம் சிதைவுபட்டிருப்பது நுணுகி ஆராய்வோர்க்குப் புலப்படும். அவ்விடத்தில் ஏடெழுதுவோரால் பிழைநேர்ந்ததுபோலும். அவ்வுரைப்பகுதி கீழ்வருமாறு.

"எள்ளலென்பது தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்டவழித் தான்நகுதலுமென இரண்டாம். இளமையென்பது தான் இளமையாற் பிறரை நகுதலும் பிறரிளமைகண்டு தான் நகுதலும் என இரண்டு. பேதைமை என்பது அறிவின்மை. மடமை என்பது பெரும்பான்மையுங் கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. இவையும் தன் மடமையான் நகுதலும் பிறன் மடமையான் நகுதலுமென இரண்டாம்". என்று அச்சிடப்பட்டிருக்கிறது அவ்வுரைப் பகுதி. (ச. பவானந்தம் பிள்ளை பதிப்பு 1917) இதில் இறுதி வாக்கியமே இங்கு ஆராய்ச்சிக்குரியதாகும். 'இவை' என்னும் அஃறிணைப்பன்மைச் சுட்டு பேதைமை மடமை என்னும் இரண்டையும் சுட்டிநின்றதாயின், "இவையும் தன்பேதைமையான் நகுதலும், பிறன்பேதைமையான் நகுதலும், தன்மடமையான் நகுதலும், பிறன்மடமையான் நகுதலும் என இரண்டிரண்டாம்" என்று அவ்வாக்கியம் அமைந்திருத்தல் வேண்டும். மடமை ஒன்றையே சுட்டின்; 'இது' என்றிருக்கவேண்டும். இருப்பின், பேதைமையைக் கூறுமலிருக்கக் காரணமில்லை. "இவை நான்கும் ஒன்று இரண்டாகி

எட்டாதலுடைய" என்று அவரே கூறினாராகலின். இந்தச் சிறுசெய்தி ஈண்டு இவ்வளவானே அமையும். இனி அவைகட்கு மேற்கோள் காண்போம்.

எள்ளல் எனினும் இகழ்ச்சி எனினும் ஒக்கும். 'பரிஹாஸம்' என வடமொழியிற் கூறுவதும் இது. வழக்கில் பரந்துவரும் 'ஹாஸ்யம்' என நாம் கூறும் நகைச்சுவை பயக்கும் உரையாடல் முதலியன பெரும்பாலும் இதனுள் பட்டு அடங்குவன. தன்கண் நிகழ்ந்த எள்ளல் பொருளாக நகை பிறந்தமைக்குப் பேராசிரியர்கூறும் இலக்கியம்,

"பல்லார் நக்கெள்ளப் படுமடல் மாவேறி
மல்லலூ ராங்கட் படுமே நறுநுதல்
நல்காள்கண் மாறி விடினெனச் செல்வானும்
எள்ளி நகினும் வரூஉம் இடையிடைக்
கள்வர்போல் நோக்கினும் நோக்கும் குறித்தது
கொள்ளாது போகாக் குணனுடையன் எந்தைதன்
உள்ளங் குறைபடா வாறு" (குறிஞ்சிக்கலி 61.)

என்னுங் குறிஞ்சிக்கலிப் பகுதியாகும். இதனுரையில் "எள்ளிநகினும் வரும் என்றது தன்கண்நிகழ்ந்த எள்ளல் பொருளாக நகைபிறந்தது" என்று கூறினர் நச்சினார்க்கினியரும். இதிலேயே பிறர் எள்ளும்போது (பல்லார் நக்கெள்ளப் படுமடல் மாவேறி) தலைமகனுக்கு நாணுணர்வு தோன்றின் அது பிறரால் எள்ளப்பட்டவழித் தான் நகுதலாம்.

"களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா
நாணி நின்றோள் நிலைகண்டி யானும்
பேணினன் அல்லனோ மகிழ்ந வானத்
தணங்கருங் கடவு ளன்னோள் நின்
மகன்தா யாதல் புரைவதாங் கெனவே" (அகம் 16.)

என்னும் அகநானூற்றில் நாணிநின்ற பரத்தைக்குப் பிறர் எள்ளத் தான் அதனால் நகுதல் தோன்றியவாறு காண்க. பேராசிரியர் இதற்கு,

"நல்லைமன்என நகூஉப் பெயர்ந் தோளே" (அகம் 297.)

என்னும் அகநானூற்றுப் பகுதியைக் காட்டி "என்பது பிறர் எள்ளியது பொருளாகத் தன்கண் நகை பிறந்தது; என்னை? தன் மகள் தன்னை மதியாது இகழ்ந்தாளென நக்கவாறு. இது வெகுளிப்பொருளாக வந்ததன்றோவெனின்; அது வீரர்க்கே உரித்தாகல் வேண்டும். இவள் அவனை வெகுண்டு தண்டஞ்செய்வாளல்லள் அதற்கே உவப்பினல்லது" என்று அது பொருந்துமாற்றையும் விவரித்தார். பிறர்மேல் வெகுண்டு வீரத்தானெழுந்த வெகுளி நகையையும் எள்ளற்பாற்படுத்தி உரைத்தல் வேண்டும். எற்றுக்கெனின் எள்ளலில்வழி வெகுளிபற்றி நகை பிறத்தற்காரணமின்மையானென்க. இதற்குப் பேராசிரியர்,

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்" (புறம் 72)

என்னும் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் 'வஞ்சினக்காஞ்சி' கூறிய பாட்டை எடுத்துக் காட்டினர்.

"புலிப்பொறிப் போர்வைநீக்கிப் பொன்னணிந் திலங்குகின்ற
ஒலிக்கழல் மன்னருட்கும் உருச்சுடர் வாளைநோக்கிக்
கலிக்கிறை ஆயநெஞ்சிற் கட்டியங்காரன் நம்மேல்
வலித்தது காண்டுமென்று வாளெயி றிலங்கநக்கான்"

(சிந்தாமணி 266.)

என்று சச்சந்தன் நக்கதும் இதன்பாற்படும். "இது வீரத்தின்கண் எள்ளுதலாற் பிறந்த நகை" என்று நச்சினர்க்கினியரும் இங்கே குறிப்பிட்டனர்.

இனி ஒன்றெனமுடித்தல் என்பதனல்,

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதி லரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்"

"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி"

என்றற்ருெடக்கத்துக் காளமேகப்புலவர் தனிப்பாடல்களாக இக்காலத்துப் பயின்று வழங்கும் ஒருசாரனவும் இதன்கட் கூட்டி முடிக்கப்படும். என்னை ? "சத்திரத்துள் உண்டியிடு முறை இருந்தவாறு நன்று" எனவும், "விகடராமன் குதிரைக்கு ஆற்றல் வாய்ந்தவாறு நன்று" எனவும் அதற்கு மறுதலைப் பொருள்பட அவையிற்றை எள்ளுகின்ற குறிப்பை யுடையான் பாடுகின்றவன் ஆகலின். இவைபோல இன்னும் வழக்குப்பயிற்சி மிக்கன ஈண்டு அமைக்கப்படும்.

இனி இளமை என்னும் பொருட்பகுதிக்கு உதாரணம் காண்டல்வேண்டும். தன்கட் பிறந்த இளமை பொருளாக நகை தோன்றினமைக்கும் பேராசிரியர் காட்டிய இலக்கியம்,

"அனையவை காதலர் கூறலின் வினைவயிற்
பிரிகுவ ரெனப்பெரி தழியாதி திரிபுறீஇக்
கடுங்குரை யருமைய காடெனி னல்லது
கொடுங்குழாய் துறக்குந ரல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே"

(பாலைக்கலி 13.)

என்னும் பாலைக்கலிப்பகுதியாகும். தலைவி அதுகேட்டு நடுங்குதற்குக்கூறி அந்நடுக்கங்கண்டு தான் நகுகின்ருன் தலைமகன் ஆகலின் இது தன்கட்டோன்றிய இளமை பொருளாக நகை பிறந்ததற்கு இலக்கியம். "தலைவன் இளமைபொருளாகத் தலைவற்கே நகைபிறந்தது. தலைவிக்கு அசைவு பிறந்தது" என்ருர் நச்சினர்க்கினியரும்.

"திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்" (மருதக்கலி 86.)

என்னும் மருதக்கலியையும் இதன்பாற்படுத்திக் காட்டுவர் பேராசிரியர். இம்மருதக்கலியில், "மகன்நகை கண்டு தாய்க்கு

நகைதோன்றிற்றேல் அது பிறரிளமை பொருளாக நகை தோன்றிற்றும்" என்னுங் கருத்துப்படக் காரியவாய்பாட்டான் ஏனையதற்கும் உதாரணங்காட்டினர் பேராசிரியர்.

"யான்நோக்குங் காலை நிலம்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்" (திருக்குறள் 1103.)

என்னுந் திருக்குறளுள் நிலம் நோக்கும் தலைவியை அவள் தன்னைக் காணுக்கால் தான் அவளைக்கண்டு தலைவன் நகுதலும், அவ்வகையே தலைவி நகுதலும் பிறரிளமை பொருளாகப் பிறந்த நகைகளாக அமைத்துக்கொள்ளப் பொருந்துவனவாம்.

"இலவிதழ்ச் செவ்வாய் இளமுத் தரும்பப்
புலவிக் காலத்துப் போற்று துரைத்த
காவியங் கண்ணூர் கட்டுரை எட்டுக்கு
நாவொடு நவிலா நகைபடு கிளவி"
(சிலம்பு; ஊர்காண் 136-139.)

என்னுஞ் சிலப்பதிகாரத்துள், "கலவிக் காலத்துத் தோன்றிய அவசநிலையில் தானறியாவகை வெளிப்பட்ட சொற்கள் கேட்போர்க்கு நகைதரத்தக்கன" என்னும் பொருண்மையுடைத்தாகலின் அக்கேட்டார்க்குத் தோன்றும் நகை பிறரிளமை பொருளாகத் தோன்றியது என்க.

"நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்" (அகம் 16.)

என்னும் அகப்பாட்டும் பிறரிளமை பொருளாக நகை தோன்றியது குறித்தது. இனிப் பேதைமை பொருளாக நகை பிறந்தமைக்கு மேற்கோள் காண்போம்.

"நகை நீகேளாய் தோழி யல்கல்
வயநா யெறிந்து வன்பறழ் தழீஇ
இளையரெய்துதன் மடக்கிளை யோடு" (அகம் 268)

என்னும் மணிமிடைபவளத்துள் தோழிக்குப் பிறந்த நகை தன்பேதைமை பொருளாகப் பிறந்ததாகும்.

"நகையா கின்றே தோழி நெருநல்
மணிகண் டன்ன துணிகயந் துளங்க

விரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை
ஆம்பல் மெல்லடை கிழியக் குவளைக்
கூம்புவிடு பன்மலர் மாந்திக் கரைய
... ... ... ...
... ... ... ...
மம்மர் நெஞ்சினேன் தொழுதுநின் றதுவே"

(அகம் 56.)

என்னுங் களிற்றியானை நிரையுள் தலைவிக்குப் பிறந்த நகை, தலைவன் இருக்கும் பரத்தை மனைக்குச் செல்லவேண்டிய பாணன் அறியாது தன்மனைக்கு வந்தமையின் தோன்றிய தாகலின் பிறன் பேதைமை பொருளாகத் தோன்றிய நகையாம்.

"சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற்
றெற்றென விறீஇயரோ வைய மற்றியாம்
நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே
பாணர் பசுமீன் சொரிந்த மண்டைபோல்
எமக்கும் பெரும்புல வாகி
நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே"

(குறுந்தொகை. 169.)

என்னுங் குறுந்தொகைப் பாட்டினுள், தலைவனது பொய்க் கூற்றைக் கொளுத்தக்கொண்டு கொண்டது விடாத தன் மடமையான் தலைவி மெய்யெனக்கொண்டு மகிழ்ந்து நகுகின்றா ளாகலின், தன் மடமை பொருளாக நகை தோன்றியதாம்.

"குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்." (குறள் 110-15.)

என்னுந் திருக்குறள் தலைவிக்குத் தோன்றும் நகையைத் தன் மடமை பொருளாகத் தோன்றியதென்றார் பேராசிரியர். மடமை ஈண்டுயாண்டையதென்பது விளங்கிற்றில்லை. அல்லதூஉம் தான் சிறக்கணித்து நோக்குதலைத் தலைவனறிந்திருந் தும் அறியானென மடமையால் அவள் நினைத்தலின் தன் மடமை பொருளாக நகை தோன்றியது என்றால் இழுக்கு இல்லை.

168



இனிப் பிறர் மடம் பொருளாக நகை தோன்றிய பகுதி யினுக்குப் பேராசிரியர்,

"நாநகை யுடைய நெஞ்சே கடுந்திறல்
வேனில்நீடிய வானுயர் வழிநாள்
வறுமை கூறிய மண்ணீர்ச் சிறுகுளத்
... ... ... ...
... ... ... ...
... ... ... ...
கருமுக முசுவின் கானத் தானே" (அகம் 121.)

என்னும் மணிமிடைபவளத்தை இலக்கியமாகக் காட்டுவர். நச்சினுர்க்கினியர்,

"உடன்சேறல் செய்கையொ டன்னவை பிறவும்
மடம்பட வந்த தோழி கண்ணும்"

என்ற துறையில் நெஞ்சொடு கழறியதாக இதனை அமைப்பர். "நாணகை" என்றும் பாடமுண்டுபோலும். ஆக இதுகாறும் நாற்பொருட் பகுதியவாம் நகை விவரிக்கப்பட்டது. இனி "உள்ளப்பட்ட" என்ருரன்றே ஆசிரியர். அதனுல் உள்ளப் படாத நகையுமுளவென்பது பெறப்படுமன்ருே? அது,

"வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்" (அகம் 5.)

என்பதாகும். சில பிரதிகளில் "வாயண் முறுவலள்" என்று அச்சிடப்பட்டிருக்கிறது. "வாயல் முறுவலள்" என்ற பாடமே சரியானது. மற்றையது பிழை.

இவைகள் நகையாயினும் இவைகட்கெல்லாம் உவகைத் தோற்றமும் உரித்து. என்னை? உவகையில்லாக்கால் நகை பிறத்தல் இயலாதாகலின். அக்கருத்துப் பற்றியன்றே, நகை முதலும் உவகை இறுதியுமாக ஆசிரியர் மண்டிலப்படுத்துவா ராயினர். இவ்வளவில் நகைச்சுவை முற்றும்.

# திருப்பாட்டின் திறன்

வித்துவான், திரு. கண்ணப்ப முதலியார், பாலூர்.

திருவளர்ந்தோங்கும் இப்பரத கண்டத்தே திகழும் செந்தமிழ் நாட்டில் உலகம் உய்யத் தோன்றியருளிய மூவர் முதலிகளான அப்பர், சம்பந்தர், சுந்தரர் மொழிந்த மொழிகள் தேவாரம் என்னும் பெயரால் வழங்கப் பெற்றும் போற்றப் பெற்றும் வருவதைப் பொதுவாகத் தமிழகமும், சிறப்பாகச் சைவ உலகமும் அறிந்ததோர் உண்மையாகும். ஆனால் மூவர் பாடல்களும் தேவாரம் என்று வழங்கப்பட்ட முறையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. என்பது சிற்சில காரணங்களால் நாம் சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளிய அருள்மொழி ஒன்றே தேவாரம் என்றும், திருஞானசம்பந்தரது திருவாக்குத் திருக்கடைக்காப்பு என்றும், சுந்தரமூர்த்திகளின் சொல் ஓவியங்கள் திருப்பாட்டு என்றும், வழங்கப்பெற்றதாக எண்ண இடம் இருக்கிறது. இக்கருத்தினைத் திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகள் பாடிய நூற்களுக்கு உரை வகுத்த திருப்போரூர் சிதம்பர சுவாமிகளின் வாக்கினின்றும் நன்கு, உணரலாம். வேண்டுவோர் அவிரோத உந்தியார் பதினேழாவது பாட்டின் உரையால் தெளிக. அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க சுவாமிகட்கும் இக்கருத்து உடன்பாடு என்பது, அவர் சுந்தரரைப் போற்றிப்பாடிய பாடல்களில், ஒன்றில் "தேன் படிக்கும் அமுதாம் உன் **திருப்பாட்டை**" என்று குறிப்பிட்டுள்ளார். கற்பனைக் களஞ்சியமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளும் "படியிலாமின் **பாட்டில்** நனிவிருப்பன் பரமன்" என்று ஆரூரரது அருட்பாட்டை அறிவித்துள்ளார். இன்னோரன்ன காரணங்களால் திருப்பாட்டு என்பது சுந்தரரது அருட்பாட்டே என்பது புலனாகிறது.

சுந்தரருடைய திருப்பாட்டு எல்லோராலும் நனிவிரும்பும் தன்மையுடையது. அஃது அங்ஙனம் அமைந்த பாடல் என்பது, முன் அமைந்துள்ள திரு என்னும் சொல்லே அறிவித்து நிற்கிறது. திரு என்னும் சொல்லிற்குப் பேராசிரியர் திருக்கோவையார் உரையில் "கண்டோரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்" என்று கூறியிருக்கின்றனர் அன்றோ!

இறைவனுர்க்கும் இவர் பாட்டில் பெருவிருப்பம் உண்டு என்பதைக் காரணங்காட்டி விளக்கினுர் சிவப்பிரகாச சுவாமிகள். அப்பாட்டு,

படியிலா **நின் பாட்டில்** ஆரூர!
நனிவிருப்பன் பரமன் என்ப
தடியனே அறிந்தனன் வான்தொழும் ஈசன்
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலாம் மென்கைமட மாதர் பால்
நினக்காகத் தூது சென்றும்
மிடியிலா மனைகடொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே.

என்பது. சுந்தரர் திருப்பாட்டில் விருப்பங்கொண்ட இறைவர் அவர்பொருட்டுப் பரவையார் ஊடல் தீர்க்கத் தூது சென்றுர் என்றும், பசிதீரப் பிச்சை எடுத்து வந்து அன்னம் இட்டார் என்றும் அன்றே இவ்வெடுத்துக்காட்டுக் காட்டுகிறது. இதனை மேலும் விளக்குவார் போல இராமலிங்க அடிகளாரும்.

இன்பாட்டுத் தொழிற்பொதுவில் இயற்றுகின்ற எம்பெருமான்
**உன்பாட்டுக்** குவப்புறல்போல் ஊர்ப்பாட்டுக் குவந்திலர் என்
றென்பாட்டுக் கிசைப்பினுமென்? இடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக் கிசைவதுகாண் அருட்பாட்டுப் பெருந்தகையே

என்று மனம் உவந்து பாடியுள்ளார்.

சுந்தரர் பாட்டை எப்பொழுதும் கேட்டுக் கொண்டு இருப்பதற்காகவே இறைவரும் இவரை ஆட்கொள்ளும் போதும்,

"மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை ; நமக்கும் அன்பில் பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே ஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு" கென்றார் தூமறை பாடும் வாயார்

என்று கட்டளையிட்டருளினார் போலும் !

இறைவனே விரும்பும் திருப்பாட்டைச் சுந்தரர் பாடும் திறன் பெற்றவராயின், இவரது கல்வி அறிவை நாம் அளந்து கூறமுடியாதன்றோ ?

இவர் கல்வியறிவின் ஆழத்தை நாம் இவர் பாடியுள்ள பாட்டினின்றும் நன்கு அறியலாம். இவர் பூகோளக்கலை அறிவை நன்கு பெற்றவர் என்பதற்குச்சான்று இவர் பாடியுள்ள திருநாட்டுத் தொகைப் பதிகம் ஒன்றே சாலும். மிழலைப்பதி அப்பெயருடன் சிற்சில இடங்களில் இருப்பதால் இந்த நாட்டு மிழலை என உணர்த்தி, மிழலை நாட்டு மிழலை, வெண்ணி நாட்டு மிழலை என்று வேறுபடுத்திச் சுட்டிய அறிவை என்னென்பது ! இவ்வாறே அப் பதிகத்தில் சுட்டியுள்ள பல இடங்களையும் அறிந்து இன்புறுக. ஆக இவர் எத்துணை நுட்பமாக ஒவ்வொரு நாடு நகரங்களை அறிந்துள்ளார் என்பதை நாம் உணரவேண்டாவோ. இவ்வாறே இவரது கல்விப்பரப்பின் ஆராய்ச்சிக்கு அரண் செய்யும் பதிகம் திருத்தொண்டத் தொகையாகும். அதில் பல காலத்தில் பல நாட்டில் பல தொண்டில் ஈடுபட்டவர்களைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கிறோம். அக்குறிப்புக்கள் இல்லையேல், நம்பியாண்டார் நம்பிகட்கோ சேக்கிழார் பெருமானுர்க்கோ அடியார் வரலாற்றை ஆணித்தரமாக அறிவிக்க இயலாமல் போய் இருக்கும். 'அலைமலிந்த புனல் மங்கை ஆனயர்' 'கடவூரில் கலயன்' என்று இவ்விரு அடியார்களின் அடியார்கள் ஊர் இன்னது என்பதையும்; 'இல்லையே என்னாத இயற்பகை,' 'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருள்' என்னும் அடைகளால் இவ்வடியார்களின் உயிர் நிலையான உண்மைத்தொண்டினையும் எவ்வளவு அழ

காகக் கூறியுள்ளார் பாருங்கள்! சம்பந்தர் திருநாவுக்கரசர் வரலாற்றை முற்றமுடிய அறிந்தவர் என்பது, "திருமிழலை, இருந்து நீர் தமிழோசை கேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர்,' என்று குறிப்பிட்டிருப்பதில் இருந்து உணரலாம். திருநாவுக்கரசர் பதிகத்தினை இவர் முற்றும் படித்தவர் என் பதை "இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல் ஈன்றவன் திருநாவுக்கரையன்" என்று தம் பதிகத்தில் குறித்துள்ள திலிருந்து அறியலாம்.

சைவசமயப் பெருநூல்களே அன்றித் தொல்காப்பியம், சங்க இலக்கியம்போன்ற இலக்கண இலக்கிய நூல்களிலும் இவருக்குப் பெரும் பயிற்சி உண்டு, என்பது இவருடைய திருப்பாட்டில் காணக்கிடைக்கும் குறிப்புகளால் நன்கு புலனாகும். திருவாரூர்ப் பரவையுண்மண்டளிப் பதிகத்தில் "எழுத்தொடு சொற்பொருள் எல்லாம் முன்கண்டானே" என்னும் தொடர் தொல்காப்பியப் பகுப்பாகிய எழுத்ததி காரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய முக்கூற்றில் இவர்க்கிருந்த பயிற்சியைக் காட்டுகிறது. திருப்பூம்புகலூர்ப் பதிகத்தில், 'கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்னும் கருத்தை "பாரி பாரி என்று பல ஏத்தி ஒருவன் புகழ்வர் செந்நாப்புலவர்" என்னும் புற நானூற்றுப்பாடலில் இவர் ஈடுபட்டிருந்தநிலையை உணரலாம். திருநெல்வாயில் அறத்துறைப் பதிகத்தில் திருக்குறள் சொல்லையும் பொருளையும் வாரிப் பெய்துள்ளார். 'அகர முதலின் எழுத்தாகி', 'பொறிவாயில் இவை ஐந்தையும் அவிய,' 'பிறவிக்கடல் நீந்தி' "உறங்கி விழித்தால் ஒக்கும் இப்பிறவி" என்பன அப்பதிகத்தில் காணும் திருக்குறட் கருத்துக்கள். அக்கருத்துக்கள் "அகரமுதல எழுத்தெல்லாம்" "பொறிவாயில் ஐந்தவித்தான்" "பிறவிப் பெருங்கடல்" "உறங்கி விழிப்பதுபோலும் பிறப்பு" என்னும் திருக்குறள் களை ஒட்டியவை அன்றோ? திருக்கானாட்டு முள்ளூர்ப் பதிகத் தில் 'இறையவனை மறையவனை எண்குணத்தினனை' என்னும் தொடர் 'எண்குணத்தான் தாள்' என்னும் திருக்குறள் தொடரேயாகும்.

சரித்திரப் புலமையும் இவர்க்குண்டு என்பதைக் கோயில் பதிகத்தில் 'உரிமையால் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கம் செய்யும்' என்று அறிந்து கூறியதி லிருந்து அறியலாம்.

சோதிட நூல் புலமைக்குத் திருவொற்றியூர்ப் பதிகத்தில் "மகத்தில் புக்கதோர்சனி" என்னும் தொடரே போதிய சான்றாகும். இத்தகைய கல்வியறிவு பெற்றிருந்தமையால் தான் இறைவனைக் குறிக்கும்போதும் 'கற்ற கல்வியினும் இனியான்' என்றும், 'பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே' என்றும் பாடியுள்ளார். இறைவர் சுந்தரரைத் தோழமைகொண்டதற்கு இவர்பால் அமைந்த கல்வி அறிவும், கல்வி ஆர்வமுமே காரணமாகும். இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள் :

அறிந்து செல்வம் உடையானும்
அளகைப் பதியாற் றோழமை கொண்
டுறழ்ந்த கல்வி உடையானும்
ஒருவன் வேண்டும் என இருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா! நினைத்தோழமை கொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழும் நுதற்கண் பெருமானே

என்று பாராட்டியுள்ளார்,

இன்னோரன்ன கல்வியறிவுடையார் பாடிய பாட்டுத் திறனுடைய பாட்டாகவும் நயனுடைய பாட்டாகவும் துலங்க வல்லது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சுந்தரர் திருப் பாட்டின் திறத்தின்முன்னே ஏனைய கலையின் திறன் எதிர் நிற்கவும் ஆற்றல் அற்றது; 'ஒத்திட்டு எண்ணவும் இயலாதது' என்பதை வள்ளலார்,

இலைக்குளநீர் அழைத்ததனில்
இடங்கருற அழைத்த தன் வாய்த்
தலைக்குதலை மதலையுயிர்
தழைப்ப வழைத்த ருளிய நின்

174



கலைக்கும் வட கலையின் முதற்
கலைக்கும் உறுகணக் குயர்பொன்
மலைக்கும் அணு நிலைக்கும் உரு
வன்றொண்டப் பெருந்தகையே!

என்று எடுத்துக்காட்டியுள்ளார். மற்றொரு புலவர் "நயத் துக்குச் சுந்தரனார்" என்று இவர் பாடலின் நுட்பத்தை அறிந்து ஓதியுள்ளார்.

இனிச் சுந்தரர் பாட்டின் திறனைச் சிறிது உணர்வோமாக. சுந்தரரும் இறையவரும் ஒருவரை ஒருவர் தோழமைகொண்டு பழகியவர் ஆதலால், சுந்தரர்க்கு இறைவர்பால் எதையும் வேண்டும் திறன் அமைந்திருந்தது. திருநாகைக் காரோணப் பதிகத்தில் தமக்கு இன்னின்ன வேண்டுமெனப் பட்டியல் தயாரித்துக் கேட்போர்போல் கேட்குந்திறன், இவர் திருப் பாட்டின் திறன்களில் ஒன்றாகும்.

"முத்தாரம் இலங்குமிளிர் மணிவயிரக் கோவை
அவை பூணத்தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவி இருந்தீரே"

என்றும்.

"பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவி இருந்தீரே"

என்றும்,

இக்கால நாகரிகமுறைக்கிணங்க மூக்குக் கண்ணாடியும் குதிரை ஊர்தியும் வேண்டி,

"காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்"
"காற்றனைய கடும்பரிமா ஏறுவதும் வேண்டும்"

என்றும் கேட்ட அடிகளைப் படிக்க நாம் வியப்பெய்தாமல் இருக்கமுடியாது. இத்துணையும் வேண்டுதற்குத் தமக்கு உரிமை உண்டு என்பதைக் குறிப்பார்போல

மாற்றமேல் ஒன்றுரையீர்! வாளாநீர் இருந்தீர்;
வாழ்விப்பனென ஆண்டீர்; வழியடியேன் உமக்கு
ஆற்றவேல் திருவுடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
அணியாரூர் புகப்பெய்த அருநிதியம் அதனில்,
தோற்றமிகு முக்கூற்றில் ஒருகூறு வேண்டும்
தாரீரேல் ஒருபொழுதும் அடிஎடுக்கல் ஒட்டேன்
கூற்றணைய கடும்பரிமா ஏறுவதும் வேண்டும்
கடல்நாகைக் காரோணம் மேவி இருந்தீரே.

என்றும் திறம்படப் பாடினர்.

உவமைத்திறன் கூறும் இயல்பு இவர் பாட்டில் மிகுதியும் உண்டு. அவ்வுமைகள் சிந்தைக்கினியனவாய்ச் செவிக்கினியனவாய்த்திகழ வல்லவை. "தினைத்தாள் அன்ன செங்கால் நாரைசேரும் திருவாரூர்"

"பளிக்குத் தாமரை பவள வெற்பில்
குளிக்கும் போல்நூல் கோமாற் கிடமாம்"
"சீதப் புனலுண்டு எரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே"
"அழல்நீர் ஒழுகி யனைய சடை"

என்றும், பாடல்களில் கூறப்பட்ட உவமைகளைச் சுவைத்து இன்புறுவோமாக.

திருப்பாட்டாகிய காவியத்தில் ஓவியத்தைத் திறனுறத் தீட்டியிருப்பதையும் சிந்தனைக்குக் கொணர்ந்து கழிபேர் இன்பம் துய்க்கவேண்டியவராய் இருக்கின்றோம்.

"அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில் சூழ்அயலில்
கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே"

இத் திருப்பாட்டில் ஒரு நாடக அரங்கையன்றே சித்தரித்து உள்ளார். ஆளுடைய நம்பிகள் - சோலையை நாடக அரங்காக்கினர்; சுரும்பை இசைகூட்டும் சுருதியாக்கினர்; வண்டைப் பாடகராக அமைத்தார். மயில்களை நடன மாதராகச் செய்தார்; தாமரை மலர்களையும் குவளை மலர்களையும் ஆடல் பாடல் கண்டு துய்க்கும் மக்கள்போல எண்ணித் தாமரையை முகமாகவும், குவளையைக் கண்ணாகவும் அமைத்தார். இவ்வுயிர் ஓவியத்தை உன்னி உன்னிச் சுவைப்போமாக.

சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்பச் சமத்காரமாகப் பாடுந் திறன் இவர் திருப்பாட்டின் திறத்தில் ஒரு பகுதியாகும். குண்டையூர்க்கிழார் ஈந்த நெற்குவியலைத் தம் இல்லம்சேர்க்க ஆட்களை வேண்டியபோது, "தாம் ஒரு மாதுடன் வாழ்வதே பெருந் துன்பமாக இருக்க, நீர் இருமாதருடன் பெருந் துன்பத்தைத் துய்க்கும் நிலையில் இருப்பதால்; யாதொரு தடையும் இன்றி ஆட்களை அனுப்புக" என்பார்போல

பாதியோர் பெண்ணைவைத்தாய் படரும்சடை கங்கைவைத்தாய்
மாதர்நல் லார்வருத்தம் அதுநீயும் அறிதியன்றே.

என்றனர். இச்சமத்காரத்திற்கு மற்றொரு சான்றையும் காண்போமாக. (தொடரும்)

---

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பாரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்.
தருமபுரம், மாயூரம் P. O.

# கந்தபுராண தத்துவம்.

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,

திரு. தா. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை

கந்தபுராண தத்துவம் என்பது கந்தபுராணத்தினது மெய்ப்பொருள் எனப் பொருள்படும். இக்காலத்து மக்களிற் பெரும்பாலோருக்குப் புராணம் என்றவுடனேயே அருவருப்பு உண்டாகக் காண்கிறோம். ஏன்? புராணத்திலே பொருந்தாக் கதைகள்பல புலவர் பெருமக்களால் புனைந்து கூறப்பட்டிருக்கும் என்னும் அவர்கள் மனப்பான்மையே, அருவருப்புக்குக் காரணம். பொருந்தாக்கதைகள் என்பது அவர்கள் குணம் செயல் முதலியவற்றிற்குப் பொருந்தாதனவா? அல்லது உலக இயலுக்குப் பொருந்தாதனவா? கடவுள் தன்மைக்குப் பொருந்தாதனவா? என்னும் வினாக்கள் பலவற்றை எழுப்புகிறது. மற்றும், புலவர் பெருமக்கள் கூறுவன பொருந்தாதனவா? அவர்கள் தங்கள் நுண்மாணுழைபுலத்தால் புனைந்து கூறுவன பொருந்தாதனவா? என்றெல்லாம் சிந்திக்க இடந் தருகிறது.

இனி, புராணம் என்பது உலகத்தோற்றம், ஒடுக்கம், முனிவர்—அரசர் மரபுகள், அவர்கள் வரலாறுகள், மனு அந்தரம் என்னும் ஐந்து பொருள்களையும் விரவிக்கூறும் நூல் ஆம்; இவ்வைந்து விஷயங்களுடன் பழைய வரலாறுகளை உணர்த்துவது. வேதத்திலே சொல்லப்பட்டுள்ள பரம் பொருளைப்பற்றிய செய்திகளைத் தக்க அளவைகளால் தெளிய விளக்குவது புராணமே. அதனால் புராண இதிகாசங்கள் 'உபப்பிரும்ஹணம்' என்று சிறப்பிக்கப் படுவன ஆம். உபப் பிரும்ஹணம் என்பது நன்றாக வளர்ப்பது எனப் பொருள்படும். வேதம்—அறிதற்கருவி. உபப்பிரும்ஹணம்—அக்கருவியால் அறியப்பட்ட பொருளை நன்றாக உள்ளத்திருத்தி வளர்ப்பது. எனவே, எதனை அறிதற்குக் கருவியாக உள்ளது? எதனை நன்றாக வளர்ப்பது என்னும் வினாப் பின் நிகழ்வன ஆம். கடவுள், உயிர், உலகம் என்னும் மூன்று பொருள்களையும்

அறிதற்குக் கருவியாக உள்ளது: அம் மூன்று பொருள்களையும் சிந்தித்துத் தெளிந்து மனதில் இருத்தி வளர்ப்பதற்கு ஏதுவாக உள்ளது என்பன அவ்வினவுக்கு விடையாம். கடவுள்—பதி, உயிர்—பசு, உலகம்—பாசம் எனச் சைவசமயநூல் கூறும், சைவசமயநூல் கூறுவது முப்பொருள்பற்றிய ஆராய்ச்சியே. அவை 'திரிபதார்த்தம்' 'முப்பொருள் உண்மை' என்று பேசப் படும். கந்தபுராணத்திலே அம் மூன்று பொருள்களையும் நன்கு விரித்து வரலாற்றிலே வைத்துப் பேசப்படுகிறது. அம் மெய்ப்பொருளைப் பற்றிய சிந்தனையே இது.

இனி, கந்தபுராண தத்துவம் என்பது கந்தன் + புராணம் + தத்துவம் என்னும் மூன்று சொற்களால் ஆகிய தொடர்மொழி. ஸ்கந்தன் என்னும் வடசொல் கந்தன் எனத் தமிழில் வந்தது. கந்தனுடைய தத்துவம், புராணத்தின் தத்துவம் எனப் பிரித்துப் பொருள் காண்க. கந்தபுராணம் வடமொழியில் உள்ளது. அதனைத் தமிழிலே மொழிபெயர்த்தருளியவர் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள். அது ஆறு காண்டங்களை உடையது. ஏழாங் காண்டமாகிய உபதேச காண்டத்தைச் செய்தருளியவர் ஸ்ரீ கோனேரியப்ப முதலியார்.

இனி, அச்சமின்மை, அகத்தூய்மை, தெய்வம்—குரு—சாஸ்திரம் முதலியவைகளில் பக்தி விசுவாசம் சிரத்தை வைத் தொழுகுதல், ஞான நெறியை அறிதல், அவ்வழியில் நடத்தல், தானம் செய்தல், ஐம்புல வொடுக்கம், தெய்வவழிபாடு, குருவழி பாடு, சாஸ்திர வழிபாடு, தவத்தூய்மை, உண்மை, இரக்கம், சாந்தம், திரிகரணசுத்தி, விதித்தன செய்தல், விலக்கியன ஓம்பல், தற்புகழ்ச்சியின்மை முதலியன மக்கட்குரிய இன்றி யமையாத செல்வங்கள். இச்செல்வங்கள் அனைத்தும் மக்கட்கு வேண்டப்படுவன. உலகத்து மக்களில் பலர் இச்செல்வங்களில் ஏதேனும் ஒன்றையோ பலவற்றையோ பெற்று வாழ்கின்றனர். இவற்றுள் ஒன்றேனும் பெறாத மக்களைக் காண்பதரிது. இவைகள் எல்லாவற்றையும் ஒருசேர ஒரு மனிதனிடத்தில் காண்கின்றோமா? இல்லை—இல்லை. மெல்ல மெல்ல அவை யெல்லாம் ஒருவனை வந்தடையும். எப்பொழுது? அவன் முயற்சியுடையவனாக—இச் செல்வங்களைப் பெறுதல் வேண்டும் என்னும் உறுதி உடையவனாக ஆம் பொழுது எல்லாம் ஆம்: ஆகாததொன்றில்லை. செல்வத்தை சம்பத்து என்பர் வட

நூலார். மேலேகண்ட செல்வங்கள் யாவும் கடவுட்செல்வத்தை அறிந்து துய்ப்பதற்குத் துணையாக உள்ளன. கடவுட்செல்வம் கடவுளாகிய செல்வம். கடவுளாகிய செல்வத்தை ஆராய்ந்தறிந்து துய்ப்பதற்குத் துணையாகவுள்ள இச் செல்வங்களையும் யாம் கடவுட் செல்வம் என்றே கூறுவோம். தேவசம்பத்து என்று கூறுவது இதுவே ஆம். இச்செல்வங்கள் வேண்டா என்று கூற எக்காலத்தினும்—எந்நாட்டினும்—எச்சமயத்தினும் உள்ள மனிதன் உடன்பாடான். கடவுள் இல்லை என்று சொல்லும் அவர்கள் கூட இதனை ஒப்புவர்: ஒப்பாமலிருக்கமுடியாது. இவையாவும் ஒரு காலம், இடம், சமயம் இவைகளைப்பற்றி வாழ்பவருக்கு மட்டும் சொந்தமல்ல, மக்கட்கெல்லாம் சொந்தமே. அச் செல்வங்கள் வேண்டா என்பவர் மக்கள் ஆகார். அவர்கள் மக்கள் உடம்பு பெற்றதனால் மட்டும் மக்கள் ஆவாரா? ஆகார், ஆகார்.

இனி, அபிமானம்—கோபம்—கொடூரம்—கர்வம்—டம்பம்—பொறாமை—அறியாமை—ஐம்புல ஒடுக்கமின்மை—இரக்கமின்மை, சாந்தமின்மை—திரிகரணசுத்தியின்மை—பொய்ம்மை ஒழுக்கமின்மை முதலிய எல்லாம் மக்கட்கு என்றும் வேண்டப்படாதன. எக்காலத்தும் வேண்டப்படாதன, எந்நாட்டினும் வேண்டப்படாதன. எச்சமயத்தாராலும் வேண்டப்படாதன. இவற்றை வேண்டுவோர் மக்கள் ஆவாரா? ஆகார், இவை அனைத்தும் செல்வங்கள் ஆகா, எக்காலத்தினும், எந்நாட்டினும் எச்சமயத்தினும் இவை துன்பம் விளைப்பன: இன்பம் விளைப்பன ஆகா. இவை தீயன. நல்லன அல்ல இத்தீய செல்வங்களையே தமக்கு உடைமைப் பொருளாக வைத்து வாழ்ந்தவர்களும் உளர்: வாழ்கின்றாரும் உளர். இவையெல்லாம் அசுர சம்பத்து என்று சொல்லப்படும் தீச்செல்வங்கள். நன்மை × தீமை: புண்ணியம் × பாவம்: இன்பம் × துன்பம்; செல்வம் × வறுமை இவை ஒன்றற்கொன்று ஒவ்வாதன. எக்காலத்தினும், எந்நாட்டினும், எச்சமயத்தினும் கூறப்படுவன இவை. ஒன்றற்கொன்று பகைமை உடையன: நட்புடையன அல்ல. தனித்தனி ஒவ்வொரு மனிதனிடத்தும் இவை மாறி மாறி வருவன. ஒருவனிடத்திலே ஒருகாலத்துத் தீக்குணம் மிகும். அப்பொழுது நன்மை யுடையன அடங்கித்தோன்றும். நல்ல குணம் மிகும் காலத்துத் தீயன அடங்கித் தோன்றும் அது இயல்பு.

இனி, எல்லா உயிர்களும் இன்பத்தையே விரும்புகின்றன. இன்பத்தை வேண்டாத உயிர்ப் பொருள்கள் இல. விரும்பி நுகர்வதில் ஏற்றத்தாழ்வு உடையன. ஒருவன் காசிக்குச் செல்ல விரும்புகின்முன். அவன் வடக்கு நோக்கிச் சென்றால் காசியை அடைவான், ஆனால் தெற்கே நோக்கிச் செல்கின்முன் அவன். காசியை அவன் அடைதல் எப்படி? அதுபோல. இன்பத்தை நாடும் உயிர்கள் இன்பத்தை அடைதற்குரிய நல் வழியை நோக்கியே நடத்தல் வேண்டும். தீய வழியிலே செல்லும் உயிர் இன்பத்தை அடைவது எப்படி? நல்லோரும் ஓரொருகால் தீமையால் மொத்துண்டு அவதியுறுவர். அந்த அவதி தீர மேலும் மேலும் தவத்தைச் செய்வர். அத்தவமும் பயன்கருதிச் செய்வன அல்ல. அதனைச் சிவார்ப்பணமாகவே செய்வர்.

இனி, நன்மை × தீமை; நல்லார் × பொல்லார்; சுரர் × அசுரர்; இன்பம் × துன்பம் இவை ஒன்றற்கொன்று மாறு பட்டன. நல்லன எல்லாம் தேவ சம்பத்துக்கள். தீயன எல்லாம் அசுர சம்பத்துக்கள். தேவர்கள் என்பவர் நல்லன செய்து நன்மையை அஃதாவது இன்பத்தை அனுபவிப்பவர். அசுரர்கள் என்பவர் தீயனசெய்து தீமையை அஃதாவது துன் பத்தை அனுபவிப்பவர். நல்லன செய்வோருக்கு இன்பம் உண்டு, தீயன செய்வோருக்குத் துன்பம் உண்டு. நல்லனவற்றை அறிந்து மிகமிகச் செய்வோர் அப்பிறப்பிலேயே மிகமிக இன்பத்தை நுகர்வர். தீயனவற்றை மிகமிகச் செய்வோரும் அவ்வாறே மிகமிகத் துன்பத்தை நுகர்வர். இந்த நல்லனவும் தீயனவும்—பாசத்தாருக்குச் செய்வன, பசுக்களுக்கென்று வேறுபாடின்றிச் செய்வன, கடவுளுக்குச்செய்வன எனப் பல திறப்படுவனவாம். இவைகளுக்குண்டாகும் பயன்களாகிய இன்ப துன்பங்களும் பலதிறப்படுவன, மெல்ல மெல்ல இன்ப துன்பங்களை உண்டு பண்ணுவன உண்டு. விரைந்து உண்டு பண்ணுவனவும் உண்டு. மிகமிக விரைந்து பயன்களைத் தருவனவும் உண்டு. சிவபெருமானுக்கும், சிவனடியார்களுக்கும் ஞானுசிரியர்களுக்கும் செய்வன எல்லாம் மிகமிக விரைந்து பயன் தருவன; எல்லையில்லாத காலங்கள் அவ்வப்பயன் நின்று நிலை பெறுவன: எவ்வகையினும் தீராதன எனப் பலவகைப் படும். இவைகளை விரிந்த நூல்களில் காண்க. நல்லாசிரியரை யடுத்துப் பல்காற் கேட்டுணர்க.

இனி, இறைவன் இன்பவடிவினன்; அன்பு வடிவினன்; ஞானவடிவினன்; ஆனந்த வடிவினன்; அருள் வடிவினன். மந்த்ர வடிவினன். அவன் எல்லா உயிர்களிடத்தும் ஒன்ருய்—வேருய்—உடனுயிருப்பவன். உயிர்கள் அன்பு செய்யச்செய்ய அவ்வன்பே பற்றுக்கோடாக வெளிப்பட்டு அருளுபவன்; அவனருளே கண்ணுகக் கொண்டு காண்பார்க்கன்றி வெளிப் பட்டருள்பவன் அல்லன். மாயா குணங்களுக்கு அப்பாற் பட்டவன்; அதனுல் நிர்க்குணன் என்பர். உயிர்களின் ஐம்புலன்களுக்கும் மனத்துக்கும் எட்டாதவன். ஐம்புலன் களுக்கும் மனத்துக்கும் எட்டும் வடிவமே சகுணம் என்று பேசப்படும். நெற்றிக்கண்ணே ஞானக்கண் எனப்படும். தியானம் செய்யும் இடம் புருவமத்தி. ஞானகுருவினுல் 'இவ்வாறு சிந்திக்க' எனக் கூறப்பட்டபின் சிந்திப்பதே நெறி. அந்நெறியே சென்ருல் அது கைகூடும். தியானிக்கும் காலத் திலே புருவ மத்தியில் சில ஒளிகள் தென்படும். அவ்வொளி களைக் கண்ணுற்றதாலேயே ஞானிகள் என்று பெருமை கொள்பவரும் உண்டு; உபதேச குருவாக வருதலும் உண்டு. "குருடும் குருடும் குருட்டாட்டமாடிக்—குருடும் குருடும் குழிவிழுமாறே" என்ற நிலைகள் பல உண்டாம். ஏட்டைப் படித்த மாத்திரத்திலேயே தம்மை ஞானிகளாகக் கருதுபவரும் உண்டு. எத்தனையோ பல நிலைகள்.

அனுபவ நிலைகள் எல்லோருக்கும் வாய்ப்பதன்று. இத ஞலேதான் அந்த அந்தப் பக்குவ நிலையில் உள்ளவர் பொருட்டு நூல்கள் பல தோன்றின. பக்குவ நிலைகள் பல, பக்குவநிலையில் உள்ளார் பலர். அவர்கட்காகச் செய்த நூல்களும் பலப்பல. எல்லா நூல்களும் ஒருவர் பொருட்டல்ல. பல்வேறு நிலையில் உள்ள ஆன்மாக்கள் பொருட்டுச் செய்யப்பட்டன அவை. மொழிப்பயிற்சி வேறு, திருவருட்பயிற்சி வேறு. திருவருள் குருவருளால் சித்திக்கவேண்டும். மொழிப்பயிற்சிக்கும் குரு வருள் வேண்டும். எனவே, குருக்களும் பலதிறப்படுவர். வித்தியாகுரு, கிரியாகுரு, ஞானகுரு என அவர் வழங்கப் படுவர். தொடக்கப்பயிற்சி செய்பவருக்கு முடிந்த அனுபவ நூல் விளங்காது. அதனுல் அவர் அதனை வெறுப்பர். வெறுத்ததனுல் நூல் கெடாது. நூற்பொருளை எப்போதாவது அறிந்துகொள்ளும் வாய்ப்பையும் அவர் இழப்பர். அவர் அதனை

வெறுத்ததனுல் அடைந்த பெரும்பயன் அது. என்செய்வது? அதற்குக் காரணம் அவர் அடைந்த பக்குவ நிலை அதுவே. கன்னி ஒருத்தி, காமுகன் ஒருவன். கன்னியிடத்திலே காமுகன் சிற்றின்பம் நுகரக் கருதுகின்றுன். கன்னியாகிய அவள் காமம் இன்னதென்பதை அறியாதவள். காமுகன் சிற்றின் பத்திலே மூழ்கித் திளைப்பவன். இவன் நிலை வேறு, அவள் நிலை வேறு. கன்னிப்பருவத்திலே அவளிடத்து அந்தப் பக்குவ முதிர்ந்த நிலை இல்லை. பின்பு பக்குவம் வந்தாள். மெல்ல மெல்ல அக்காமநிலையும் அவளை வந்தணுகியது. அரும்பு போதாய்த் தானே மலரவேண்டும். அக்காலத்திலே தேன் தானே உண்டாம். மணமும் உண்டாம். வண்டுகளும் தானே வந்து மொய்த்துத் தேன் உண்ணும். சிலர் அதனை அறியாமல் அரும்பை மலரவைப்பர். அதனிடத்துத் தேன் உண்டாகுமா? மணந்தான் உண்டா? வண்டுகள் வந்து கிண்டி மது உண்ணுமா? இவை எல்லாம் உலக நிலை. இவை போலவே ஞான நிலைகளும். இதனைத் தாயுமானவ அடிகள் சில சொற் களால் நனி தெளிவிக்கிருர்கள்.

இனி, தேவர்கள் இன்பநிலையில் வாழ்கின்றனர். அவர்கள் குலப்பகைவர்கள் அசுரர்கள். அவர் தவத்தில் மேம்பட்டனர். பெறலரும் பேற்றைப் பெற்றனர், பெற்ற பேற்றை அசுரர் நல்ல வகையில் செலவு செய்யவில்லை. பேற்றைச் செலவழித் தனர். இதனை உலக நிலையிலே வைத்துக் காண்போம். சிலர் முற்பிறவியில் நல்ல தவத்தைச் செய்தனர். அதனுல், அவர் பெறலரும் பேறு பெற்றனர். அப்பேறுகளாவன :— குலம், செல்வம், அதிகாரம், ஆயுள் முதலிய ஆக்கங்கள். அவ்வாக் கங்கள் பெறப் பெருந்தவஞ் செய்தனர். அத்தவம் பேற்றுக்கு ஆயிற்று. பெருந்தவம் வேறு, துய்க்கும் தவம் வேறு. இரு வேறு தவஞ்செய்தவர் மிகச்சிலரே ஆவார். குலம் பெற்ருர், செல்வ நலம்பெற்ருர், அதிகாரம்பெற்ருர் ஆயுள் நாளும் மிகப்பெற்ருர், அதனுல் என்ன பலம் பெற்ருர். எண்ணினுல் அவர் அவற்ருற் பயனின்மை ஒன்றே பெற்ருர். இது வியப்பன்று.

(தொடரும்)

# “தஞ்சாவூர்த் தட்டான்”

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'

திருவாவடுதுறையில் 31—1—54 முதல் மூன்று நாட்கள் திருமந்திர மாநாடு மிக்க சிறப்பொடு நடைபெற்றது. உலகறிந்ததே. முதல் நாளில் திருமந்திரம் கயிலாய சித்தர் உரையுடன் இலவசவெளியீடாக அறிஞர் பலர்க்கும் துறைசை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் திருக்கையால் வழங்கியருளப்பட்டது. இதுவரையில் அச்சிடப்பெறாதது. அன்று, எங்கள் தருமை ஆதீனத்து ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருமந்திரக் கருத்தும் வாழ்த்துரையும் என்னும் பெயர்கொண்டதும் மாநாட்டுக்கென்றே வெளியிட்டதுமான நூல் ஒன்றை வாசித்துக்கொடுக்கும்படி ஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் ஒருவரையும் அடியேனையும் ஓதுவாமூர்த்திகளையும் மற்றும் ஒருபுலவரையும் ஏவி யருளினார்கள். அவ்வருளாணைப் படிசென்று துறைசை மாநாட்டில் முறைப்படி குருமகா சந்நிதானம் அவர்களைவழிபட்டுப் பொன்னாடையும் உயரிய மலர்மாலையும் அணிந்து போற்றிய மகிழ்ச்சியுடன் வித்வான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அதைச் சிறக்க வாசித்துக் கொடுத்தார்கள். அன்றிரவு பத்து மணிக்குத் துறைசையில் குருவழிபாடு எல்லாம் முடிந்தபின் குருமகாசந்நிதானம் எங்களைக் கடைக்கணித்தருளிய போது அத்திருமந்திரம் என்னும் நூலும் கொடுத்தருளப்பெற்றோம். துறைசைக்கு எங்களை அழைத்துச்சென்ற திரு. கே. வேங்கடராஜுலு நாயுடுவும் அத்திரு மந்திரத்தைப் பெற்றார். அவர் மறு நாள் பொழுது புலர்ந்ததும் தம் வீட்டில் அத்திருமந்திர நூலை எடுத்துப் படித்துக்கொண்டு வரும்போது அதிலுள்ள முப்பத்தொன்பதாவது திரு மந்திரத்தைக் கண்டார். அதில் ஒரு தொடர் இருப்பக்கண்டார். அங்கே கருத்தூன்றினார். அழுந்திக்கற்றார். கற்றும் மறைபொருள் வெளிப்படவில்லை. அதனால், எங்கள் குருமகாசந்நிதானத்தில் சென்று தரிசித்து அத்திருமந்திரத்தைப் பற்றிய ஐயத்தை விண்ணப்பித்தார். அவர்கள் அதுகண்டு அதன் பொருளை அவர்க்கும் அறிவித்தருளினார்கள். சிலமணிநேரம் கழித்துத் திருமடத்துள் நாயுடுவும் எங்களைக் கண்டார். அதைப்பற்றி என்னையும் வினவினார்.

184



அப்பொழுது நான்பெற்ற இன்பத்தை என் மனத்தைக் கோயிலாகக் கொண்டருளியிருக்கும் கச்சியேகம்பன் அன்றி மற்றுயாரும் அறியார். அவ்வின்பத்திற்கு அளவும் உண்டோ? அப்பொழுதே நூலே எடுத்துத் திறந்துநோக்கினேன். அதேஇடம் எதிர்ப்பட்டது. நான்குயாண்டுகளாகத்தேடிய திருமந்திரப் புதையல் கிடைத்தது. சென்னைச்சைவ சித்தாந்த சமாஜத்தின் 'சித்தாந்தம்' என்னும் மாதப் பத்திரிகையில் பல ஆண்டுகட்கு முன்னமே இத்திருமந்திரத்தைப் பற்றிய கட்டுரை ஒன்றை எழுதிவெளியிடச் செய்துள்ளேன். அதுவே இப்போதைய மட்டிலா மகிழ்ச்சிக்குக் காரணம்.

சிவாநந்தமாலை என்னும் பழைய நூலில் ஒரு வெண்பா

"தஞ்சாவூர்த் தட்டான் எனமூலர் சாற்றுநெறி
நெஞ்சால் நினைவுற்றேன் நின்மலகேள் — எஞ்சாதே
தன்னையழித் தெற்பண்ணித் தன்னில் எனை அழித்துத்
தன்னைமிகப் பண்ணுதலால் தான்"

என்று இருக்கின்றது. அதைப் படித்தபோது, திருமந்திரத்துள் 'தஞ்சாவூர்த் தட்டான்' என்றுள்ளதொரு பாடல் இருத்தல் வேண்டும் என்று உணர்ந்து, நாள்முழுவதும் துருவித்துருவித் தேடினேன். அப்படி ஒரு பாடல் எங்குமில்லை, 'தட்டான்' என்றுமட்டும் சில இடத்தில் வந்துள்ளது. 'தஞ்சாவூர்த் தட்டான்' எதிர்ப்பட்டிலன். பின்னர், அச் சிவானந்த மாலை வெண்பாவிற்கு மட்டும் ஒருவாறு பொருளெழுதி, திருமந்திரத்துள், 'தஞ்சாவூர்த் தட்டான்' என்றுள்ள பாட்டு, முன் இருந்து பின் கிடைக்காததைத் தெரிவித்தேன். அதுவே அக் கட்டுரையின் சாரம். இவ்வுண்மையை ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் இருவர் திருமுன்னும் தொழுது நின்று தெரிவித்துக்கொண்டேன். அக்குருநாதர் இருவரும் அதுகேட்டுத் திருவுள்ளம் உவந்தருளினார்கள்.

அத் திருமந்திரப் பாடலைப் பலரும் அறிதற்பொருட்டு இதிலும் எழுத விரும்பிற்று என் உள்ளம். அஃதாவது,

'தஞ்சாவூர்த் தட்டான் தலைத்துக்கு நாயகம்
மஞ்சாடி கொள்ளான் வழக்கன்றி மன்றேறான்
துஞ்சான் உறங்கான் தொழில்செய்யான் சோம்பிரான்
அஞ்சாறு நாளைக் கவதியிட் டானே' (39)

இதன் பொருள்;

1. தஞ்சாவூராவது காயம், தத்துவம் முப்பத்தாறும் உட்கொண்டிருக்கையினாலே காயத்துக்குத் தஞ்சாவூர் என்னும் நாமம் உண்டாச்சுது. ஆகையினாலே, வாரியிற் சூரியன் தோயாததுபோலவே தஞ்சாவூராகிய காயத்துடன் தலைவன் தோயாமையினாலே தலைவனுக்குத் 'தஞ்சாவூர்த் தட்டான்' என்னும் நாமம் உண்டாச்சுது.

2. தலைவனுடைய ஆழி ஆகையினாலே 'தலத்துக்குநாயகம்'

3. சிற்றறிவின் பயனை உட்கொள்ளாமையினாலே 'மஞ்சாடி கொள்ளான்' மஞ்சாடி - ஒரு சிற்றளவைக் குறிக்கும் பெயர்.

4. ஐம்பத்தோர் எழுத்தையும் உருப்படுத்தி, அவ்வெழுத்திலேதான் வெளிப்படாமையினாலே 'வழக்கு அன்றி மன்று ஏறான்'.

5. தஞ்சாவூராகிய காயத்துடன் தான் அழியாமையினாலே 'துஞ்சான்'

6. மாயாமயக்கம் இல்லாமையினாலே 'உறங்கான்'

7. பஞ்ச கிருத்தியம் நடத்தாமல் நடத்துகையினாலே 'தொழில் செய்யான்' 'சோம்பு இரான்'

8. அஞ்சு - ஐம்பொறி, அதனோடு ஆன்மாவைச் சேர்த்தால் ஆறு ஆகும். அஞ்சாறு-ஐம்பொறியும் ஆருவதாகிய ஆன்மாவும். ஆன்மாவுக்குப் பிறப்பு இறப்பு உள்ளபடி நடத்துகையினாலே 'அஞ்சாறு நாளைக்கு அவதி இட்டானே' என்றார். அவதி - கால எல்லை. பிறப்பும் இறப்பும் காலவரையறை செய்பவை. ஆன்மாவுக்குக் காலவரையறை இல்லை. பதி பசு பாசம் மூன்றும் அநாதி நித்தியம். ஆதியும் அந்தமும் இல்லாதவை. ஆன்மாக்களின் வினைக்குத் தக்கபடி பிறப்பும் இறப்பும் ஆகிய அவதியை இட்டான்.

முதன்முதலாக வெளிவரும் இத்திருமந்திரப் பதிப்புள் இதுபோல இன்னும் பல இருக்கின்றன. அவற்றுள், 'அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும்' எனத் தொடங்கும் திருமந்திரமும் (25) பழம் பதிப்புக்களில் (160) உள்ளதற்கு வேறு என்று தெரிகின்றது. அஃது ஆராய்ந்து பின் எழுதப்படும்.

முத்து. சு. மாணிக்கவாசகன்.

186

# திருவாவடுதுறையில் திருமந்திரமாநாடு.

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன்,

தமிழாசிரியர், தருமபுரம்.

**பழைய மந்திரம் :**

தமிழ்மக்கள் கடவுட்கொள்கையை மறவாதவர்கள். தங்களுடைய வாழ்க்கையின் இயக்கம் திருவருள் இயக்கமே என்பதை நன்றாக உணர்ந்தவர்கள். தாம் செய்யும் ஓவ்வோர் செயலும், நினைக்கும் ஓவ்வோர் நினைப்பும் ஆண்டவனது செயலே - திருவுள்ளமே என்பதைத் தெளிவுறக் கொண்டவர்கள். உவந்து கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் நிறைமொழி மக்களைப்பேணி அவர்கள் வழிநின்றவர்கள். 'நெருப்பாற் சுடப்படினும் ஒரோருகால் உய்யமுடியும்; ஆனால் பெரியவர்களைப் பிழைசெய்தவர்கள் என்றும் உய்யவேமுடியாது என்பார், தமிழர் நெறி உணர்ந்த தமிழகத் தந்தை வள்ளுவனார். அத்தகைய பெரியவர்களது அறிவு நிறைந்த ஆணைமொழிகள் மக்களது வாழ்வியலுக்கு வரம்பு கட்டின. அவற்றுக்குத் தமிழ்மக்கள் மந்திரம் எனப் பேரிட்டனர். இவ்வாறு நிறைமொழி மாந்தர் ஆணைவழிப் பிறந்த மறைமொழிகளுக்கு 'மந்திரம்' எனத் தமிழ்மக்கள் பேரிட்டது இன்று நேற்றல்ல; தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னால்; அதாவது கி. மு. 5 நூற்றாண்டுகளுக்கும் அப்பால். இதனைத் தொல்காப்பியரே கூறுகின்றார் ;

> "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்று. இதில் தொல்காப்பியர் 'என்ப' என்று குறிப்பது, இந்த வழக்கு தமிழ்நாட்டுத் தமக்குமுந்திய சான்றோரிடத்து அடிப்பட்டதொரு வழக்காம் என்பதை நன்கு உணர்த்துகின்றது.

**திருமூலர் திருமந்திரம் :**

இவ்வாறு, தமிழ் நாட்டில் பழங்காலத்துத் தோன்றிய திருமூலர் என்ற பெரியார் ஓர்மந்திரம் அருளினார். அதுவும்

மூவாயிரம் தமிழ்மந்திரங்கள். சிறந்த சாத்திர நூற்கருத்துகளின் சாரங்களையெல்லாம் மந்திரமாகப் பிழிந்து வடித்தார். இத்தமிழ் மூவாயிரத்துக்கு நல்லதொரு விமர்சனம் எழுதினர் ஒரு பிற்காலத் தமிழ்ப் புலவர். திருக்குறள், வேதசாரங்கள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமூலர் திருமந்திரம் எல்லாம் ஒரே பொருளை உட்கிடையாகக் கொண்டவை என்று பாடினர். இம்மந்திரத்தினை இயற்றியருளிய திருமூலதேவரை எம்பிரான், நம்பிரான் என்று மெய்யறிஞர் பாராட்டிப் போற்றினர்.

**மாநாடு கூடுக :**

இத்தகைய இணையற்ற திருமந்திரத்தின் உட்கிடையைத் தமிழ்நாடு உணரவேண்டும் என்று திருவாவடுதுறையாதீனத்து 21-வது பட்டத்து, இப்போது எழுந்தருளியிருக்கின்ற திருப்பெருந்திரு. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவுள்ளம் கொண்டார்கள். பெரியோர்கள் திருவுள்ளம் விரைவில் ஈடேறுமல்லவா? அவ்வண்ணம், திருப்பெருந்திரு. சந்நிதானமவர்களின் திருவுள்ளம் 'திருமந்திர மாநாடு' கூட எண்ணிய மாத்திரத்தில் நல்லன அருளும் நமச்சிவாய மூர்த்திகளது பேரருள் அதற்குத் துணைசெய்தது. ஜனவரி 31, பிப்ரவரி 1, 2 தேதிகளில் மாநாடு கூடுக என்று அருளாணையும் பிறந்தது.

**திருமந்திர மன்றம் :**

பண்டைத் தமிழ்நாடு, மன்றங்களை ஊர்தோறும் உடையதாயிருந்தது என்று அறிகின்றோம். மன்றங்கள்தோறும் அறிஞர்கள் அறிவுரை வழங்கினர். மக்கள் திரண்டு கூடிக்கேட்டனர் அன்று. அந்தப்பழைய நிலையைத் திருவாவடுதுறையில் விண்ணளாவிய திருமந்திர மன்றம் நினைப்பூட்டியது. இனிய பூங்காநடுவில், திருமந்திர மன்றம் எழிலுக்கு எழிலாய் எழுந்தோங்கிநின்றது. திருமந்திரத்திலுள்ள அழகியசில மந்திர உரைகள் மன்றத்தை ஆங்காங்கு அணி செய்தன. ஒளிப்பெருக்கமும், ஒலிப் பெருக்கிகளும் காண்போரது - கேட்போரது கண்ணுக்கும் கருத்துக்கும் நல்ல விருந்து தந்தன.

**மன்றத்தின் நடுவில்:**

மன்றத்தின் நடுவே அழகியதொரு எழில்மேடை: அதன் மேலே ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளது திருவுருவத்தை இப்போது எழுந்தருளி இருக்கும் சந்நிதானமவர்கள் தலைதாழ்த்துக் கரங் குவித்து வணங்குகின்ற இனியதோற்றம் எழிலோவியமாகக் காட்சி அளித்தது. அதன் முன்னே, அச்சிட்ட திருமூலர் திரு மந்திரப் புத்தகங்கள் சிறப்பொடு செய்த பூசனையுடன் காட்சியளித்தன. அதனருகிலே, மகாசந்நிதானம் அவர்கள் அழகிய திருமுகத்தோடு திருவீற்றிருந்தார்கள்.

**அன்பர் கூட்டம்:**

'சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் - திரண்டு திரண்டுன் திருவார்த்தை, விரிப்பார், கேட்பார், மெச்சுவார்' என்றெல் லாம் மணிவாசகம் விதந்தோதிய வண்ணம், உள் அன்பு நிறைந்த அறிஞர்கள் கூடியிருந்தார்கள். அன்பர்கள் அகமும், முகமும் நல்ல மலர்ச்சி. எப்போது பேச்சாளர் தம் சொன்மாரி தொடங்கும் என்று எதிர்நோக்கியிருந்தன அன்பர்களது செவிகள்.

**நாலரை மணி:**

மாநாட்டின் முதல்நாள் நடவடிக்கை தொடங்கலாமென்ற சந்நிதானமவர்கள் திருவுள்ளக் குறிப்பு உணர்ந்த தொண்டன் ஆசிரியரும், திருவாவடுதுறை ஆதீன மகாவித்வானும் ஆகிய நாகர்கோவில் திரு. ஆறுமுகநாவலரவர்கள் மாநாட்டின் திறப் புரையாற்றினர்கள்: மாநாட்டின் முதல் நாள் தலைமை உரையை ஆற்றி முடித்தார்கள்;

அவர்களது தலைமையுரையிலே, சைவ சித்தாந்த சாரங்க ளெல்லாம் ஒன்றுகூடிக் கேட்போர்க்குத் தேன்மாரியெனத் தித்தித்தன.

**வாழ்த்துரை:**

எங்கள் தருமையாதீனத்து, 25-ம் பட்டமாக இன்று எழுந் தருளி அருளரசோச்சுகின்ற ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக

பரமாசாரிய சுவாமிகளவர்கள் ஆதீனத்து அடியவரான, வித்துவான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் மூலம் ஓர் வாழ்த்துரை அனுப்பியிருந்தார்கள். முதலில் துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்குப் பொன்னுடை போர்த்திய பின் தம்பிரான் சுவாமிகள் வாழ்த்துரை வெளியிட்டை வாசித்தளித்தார்கள். வாழ்த்துரை - வாழ்த்துரையாக மட்டுமின்றி திருமந்திரக் கருத்துரையாகவும் அமைந்திருந்தது.

**வாழ்த்துரையிலே :**

வாழ்த்துரையிலே மகாசந்நிதானமவர்கள், அரியபெரிய கருத்துக்களை எல்லாம் தெள்ளத்தெளிய விளக்கி இருந்தார்கள்.

நமது பாரதநாடு ஓர் கர்மபூமி என்றும், தோத்திரமும் சாத்திரமுமாக மெய்ப்பொருள் விளங்குகின்றூர் என்றும். திருவாவடுதுறை தருமபுரம் திருமடங்கள் என்றும் தொடர்புடையன என்றும், திருமந்திரம் துறைசையில் தோன்றிய திருமுறை என்றும், திருமூலரது வரலாற்றிலே வரும் தத்து வார்த்தங்கள் இன்ன என்றும், தமிழர் தவப்பயனே திருமூலர் திருமந்திரமாக வடிவெடுத்தது என்றும், திருமந்திரமாலையின் ஒன்பது தந்திரங்களிலும் இன்னின்ன ஆகம சாரங்கள் பொதிந்திருக்கின்றன என்றும், குறிப்பிட்டிருந்தார்கள்.

திருவாவடுதுறை மடாலயம் மிகத் தொன்மையானது; துறைசை மடத்தின் பெருமை சொல்லுந்தரத்தது அன்று. சிவஞான சுவாமிகள் போன்ற ஞானச்செல்வர்களுக்கும், மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்ற தமிழ் அருளாளர்களுக்கும் தாயகமாம் பெருமை உடையது; அரும்பெரும் சைவ சித்தாந்த நூல்களை வெளியிடுகின்றது; மாநாடுகளைக் கூட்டி மாபெரும் தொண்டாற்றி வருகிறது. திருவெண்ணெய் நல்லூரிலே ஆண்டுதோறும் கூட்டிவரும் மாநாடுகள் பெரிதும் பாராட்டதக்கன. இத்தனை பெருமைகளும் இவ்வாதீனத்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களுக்கே உரியது. இவ்வாறு திக்கெட்டும் திருமந்திரம் பரவத் திருமந்திர மாநாடுநடத்துவது பாராட்டத்தக்கது; எனவே, இம்மாநாடு சிறப்புற வாழ்க.

என்றெல்லாம் வாழ்த்துரையிலே எங்கள் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள்.

**சொற்பெருக்குகள் :**

வாழ்த்துரை வாசித்தளிக்கப்பெற்றதும் சொற்பெருக்குகள் தொடங்கின. தருமபுர ஆதீனப் புலவரும், சித்தாந்த வித்தகரு மான திரு. க. வச்சிரவேலு முதலியாரவர்கள் B. A. L. T., முதல் தந்திரத்தைப்பற்றி பேசினார்கள். திரு. முதலியாரவர்கள் ஆங்கிலத்தோடு ஆரியமும் செந்தமிழும் அமைவுறக் கற்றவர்க ளாதலின், ஆகமக்கருத்தோடு மந்திரக்கருத்தை ஒப்பிட்டு அழகுறப் பேசினார்கள். ஞானாசாரியரான சிவஞான சுவாமி களைப்பற்றி அவர் குறிப்பிடும்போது உணர்ச்சி வயப்பட்டுக் கண்ணீர்சொரிந்து பரவசப்பட்டார்கள்.

அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழா ராய்ச்சியாளர் திரு. ஜி. சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள் M. A., B. L., இரண்டாம் தந்திரத்தைப்பற்றிப் பேசினார்கள். நல்ல பேச்சு. கற்றாரேயன்றி மற்றாரும், படித்தாரேயன்றிப் படியாதாரும் உணர்ந்து நெகிழும்படித் தெள்ளத் தெளிய இருந்தது அவர்கள் பேச்சு. இசையுடன் கலந்து அவர்கள் திருமந்திரப்பாக்களை இசைத்தபோது, திருமூலரது திருவுள்ளத் தோடு அன்பர்கள் உள்ளமெல்லாம் சென்றிசைந்தன.

இறுதியாக, அண்ணாமலைநகர்த் தமிழ் விரிவுரையாளர் திரு. F. S. வரதராச அய்யர் அவர்கள் ஐந்தாம் தந்திரம்பற்றி அழகாகப் பேசினார்கள். திரு. ஐயரவர்கள் கருத்துக்களைக் கேட்போர் மனத்தைப் பிணிக்கும் தகையவாகச் சொல்லும் அருங்குணம் மிக்கவர்கள். அவர்களது இன்றைய பேச்சும் அறிஞர்களுக்கு நல்லதொரு விருந்தேயாகும்.

தலைவராக அமைந்த மகாவித்துவான் அவர்களது முடி வுரையோ, பேச்சாளர்கள் குறித்துச்சென்ற கருத்துக்களை ஆழமாகப் பதியும்வண்ணம் விளக்கி எல்லோரும் சமயநெறி யில் ஒழுகிப் பெறவேண்டிய முத்தி நிலைகளை உணர்த்தி, அன்பர்கள் எல்லோரது சிந்தைகளையும் திருமூலதேவர்பால் ஈர்த்து ஒடுக்குவதாக அமைந்தது. மேலும், மனிதன் ஆணவ மலத்தினின்று நீங்கவேண்டுமென்றும், அப்போதுதான் வாழ்வு ஒளிரும் என்றும் கூறி, மேடைமீதிருக்கும் சந்நிதானமவர்கள் நமச்சிவாய மூர்த்திகளை வணங்குவதாக அமைந்த திருவுருவப் படமே சான்றாகும் என்று அவர்கள் குறிப்பிட்டது மிகச் சுவையாக இருந்தது.

மாநாட்டின் முதல்நாள் நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்றது.

(9)

# இரண்டாம்நாள்

**தலைமைப்பேருரை :**

இன்று தலைவராக அமைந்தவர்களோ சைவ உலகத்துக்கு ஓர் அச்சாணியாக இருந்து தொண்டாற்றி வருகின்ற பழநி, சைவசித்தாந்தசரபம், சிவத்திரு. ஈசான சிவாசாரியார் அவர்கள். அவர்களது பேருரை நல்லதொரு கருத்து விருந்தாக அமைந் திருந்தது. திருநான் மறைமுடிவு திருமந்திரம்; ஆகமங்களின் சாரம் திருமந்திரம். திருமந்திரம் உயர்ந்த தத்துவநூல்'' என்று அரும்பெருங் கருத்துக்களை அழகுறப் பேசினார்கள்.

**யோகநெறி :**

சொற்பெருக்குகளில் முதலில் அமைந்தது, எங்கள் தருமை ஆதீனத்துப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவரும், இன்றைய தமிழ்நாட்டு இலக்கிய மேதைகளில் ஒருவருமான வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் பேச்சு. அவர்கள் பேச்சோ, ஆற்றொழுக்காக அமையும் அமுதமாரி. யோகநெறியை விளக்கும் மூன்றும் தந்திரம் அவர்களது பேச்சின் தலைப்பு. அவர்கள் பேச்சின் சில பல கருத்து முத்துக்கள் பின்வருவன :-

உடல்தூய்மை, உள்ளத்தூய்மை, உணவுச்சுருக்கம் இவை யோகநெறி நிற்கும் சாதகர்களுக்கு இன்றியமையாத மூன்றும்'' என்று குறிப்பிட்டுப் பின்னே, சிவபூசை, ஆத்திகம் என்பன பற்றி மந்திரமாலை கூறுவனவற்றை ஆராய்ந்து பேசினார்கள். அவர்களது பேச்சுமுறை அருளாளர்க்கோர் விருந்தென்றே கூறலாம்.

**குருவருள் :**

இரண்டாவது பேச்சும், எங்கள் ஆதீனக் கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், சித்தாந்த ரத்னாகரம், புலவர், திரு. முத்து, சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் ஆறும்தந்திரம் பற்றியது. திரு. முதலியாரவர்கள் கன்னித்தமிழ் கடவுள் தமிழாகமாறி சங்கத்தமிழ் தெய்வத்தமிழாகமாறி வையத்துப் பரவ வேண்டுமென்று உள்ளங்கொண்டு ஓவாது பணியாற்றி வருபவர்கள். அவர்கள், குருவருளும் துறவும், தவமும், இத் தந்திரத்துள் உணர்த்தப்பெறுகின்றன. திருநீற்றின் பெருமை

192



யறிந்து அதனை மெய்யாரப்பூசுதல் இன்றியமையாதது. திருநீற்றோடு உள்ளத் தூய்மையும் வேண்டும்; ஆசாரத்தொழுகி ஆசாரியனை வழிபடல் வேண்டும்'' என்று பேசிமுடித்தார்கள்.

**ஞானச் செய்திகள் :**

எட்டாம் தந்திரத்தைப்பற்றி அடுத்துப் பேசவந்த காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் திரு. அருணை வடிவேலு முதலியாரவர்கள், எளிய இனிய தமிழில் எல்லோரும் புரிந்துகொள்ளும் வண்ணம் பேசினார்கள்; முதலில் எட்டாம் தந்திரம், 'ஞானச் செய்திகள்' என்று குறிப்பிட்டார்கள். தலைவர் முடிவுரையோடு இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் முடிந்தன.

## மூன்றும்நாள்

**திருமூலர்காட்டும்வழி:**

இன்று தலைவராக அமைந்தவர்கள் நாகர்கோவில் தொண்டன் ஆசிரியரும், ஆதீன மகாவித்துவானுமாகிய திரு. ஆறுமுகநாவலரவர்கள். தம் தலைமைப் பேருரையில், திருமூலர் காட்டும் வழியைப்பற்றி விளக்கிப்பேசினார். திருமந்திரம் சிவயோகக் களஞ்சியமாமென்றும், திருமூலர் இறுதியிலே செய்வது பஞ்சாட்சர உபதேசமென்றும், பக்குவமுள்ள மாணாக்கர்களுக்குத்தான் குருவருள் கிட்டுமென்றும், சூக்கும பஞ்சாட்சரம், நமச்சிவாயத்தின் பெருமை எனுமிவற்றையும் திருமூலர் அழகாக விளக்கி நம்மனோர்க்குக் காட்டி இருக்கிறாரென்றும் பேசினார்.

**இளவழகனார் இன்னுரை:**

அடுத்து, மாம்பாக்கம், குருகுலம் இளவழகனாரவர்கள் ஒன்பதாம் தந்திரத்தைப்பற்றிப் பேசினார்கள். திரு. இளவழகனார் தூய தமிழில் சுவை சொட்டப்பேசவும் எழுதவும் பெருவல்லமை படைத்தவர்கள். அவர்களது பேச்சுநடையிலும் எழுத்துநடையிலும், துள்ளும் தமிழ் நெஞ்சை அள்ளும் தமிழாக மாறி மிளிரும்.

ஞானயோகப் பெருவாழ்வுக்கு வகைசெய்யும் நூல் இதைப் போல் வேறு எந்நூலும் இல்லை. என்பது அவர்கள் இன்னுரையில் சில அமுதமொழிகள்.

**கலைமகளார் கருத்துரை:**

சென்னை கலைமகள் ஆசிரியர் வித்துவான், திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள் அடுத்து 'ஏழாம் தந்திரத்தைப் பற்றி, எழுச்சிபொங்கும் எளிய இனிய தமிழிலே கருத்துரை வழங்கினார்கள். திரு. கி. வா. ஜ அவர்களை உலகம் நன்கறியும். இலக்கிய ரசனையிலே ஈடுபட்டுப் பழைய இலக்கியங்களுக்கெல்லாம் புழுதி துடைத்துப் புதுமெருகிட்டுத் தமிழ் உலகத்தின்முன்னே எடுத்துப் படைப்பதில் இணையற்ற பெரியார். இத்தகைய எழுத்துலகச் சிற்பியின் பேச்சுக் கலையின் சிறப்பைப் பேசவாமுடியும்,

கடவுள் எங்கும் எப்பொருளிலும், என்றும் கலந்திருக்கிறார் என்ற கருத்து திருமூலர் சொல்கின்ற ஒரு திருப்பாடல் மூலம் அறியலாம். பூமி ஆவுடையாராகவும். ஆகாயம் அதிலமைந்த இலிங்கமாகவும், கடல்நீரை உண்ட கருமேகங்கள் அவ்விலிங்கத்துக்குத் திருமுழுக்கு ஆட்டுவனவாகவும், எட்டுத் திக்குகளே அப்பெருமானது ஆடைகளாகவும், ஆகாயத்து விண்மீன்களே அப்பெருமான் கழுத்திலணியும், திருமாலையாகவும் எண்ணி அவ் அழகுக்காட்சியை அகக்கண்ணிற்கண்டு ரசிக்கிறார் திருமூலதேவர். மற்றும் சிவலிங்கபேதம் சம்பிரதாயம், அருளியல்பு. சிவபூசனைச்சிறப்பு இன்னபிறவும் இத்தந்திரத்துட் கூறப்படுகின்றன. என்று முடித்தார்கள்.

**பேசாத பேச்சு:**

அடுத்து எங்கள் தருமையாதீனத்துப் பல்கலைக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'நான்காம் தந்திரத்தைப்பற்றி நல்லுரை மொழிந்தார்கள். பழுத்த தமிழ்ப்புலமைபாலித்தவர்கள். அவர்கள். நான்காம் தந்திரம் பேசாத ஓர் பேச்சு; சொல்லாத சொல் என்று குறிப்பிட்டுப் பின்னே பேசினார்கள்.

அஜபாமந்திர யோகம், பஞ்சாட்சரமந்திரஜபயோகம், பிரணவப்பெருமை, சிவசக்கரம், பீஜாட்சரங்களைக்கொண்ட

புவனபதி சக்கரம், நவாட்சரியாகிய சதாசிவநாயகியின் திருவுருவக் காட்சி முதலிய பல உண்மைகள் இத் தந்திரத்தில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இத்தந்திரம் திருமந்திரமாலைக்குள்ளே ஓர் 'மந்திரமாக்கடல்''

என்று பேசினார்கள், பின்னர் தலைவர்தம் தொகுப்புரையோடு மாநாட்டின் மூன்றாம்நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

## நான்காம்நாள்

**அமைச்சர்பவனி:**

இன்று தலைமைப்பதவி ஏற்றவர்கள் சென்னை அறநிலையப் பாதுகாப்பு அமைச்சர் திரு. கனம். வேங்கடசாமி நாயுடு அவர்கள், B. A., B. L., முதலில், கனம் அமைச்சர் திருமடத்திலிருந்து திருமந்திரமன்றத்துக்குப் பவனியாக அழைத்துவரப் பட்டார்.

மன்றத்துக்கு வந்ததும், திருப்பெருந்திரு மகாசந்நிதானம் அவர்கள் கனம் அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்திப் பூமாலை சூட்டினார்கள். மெய்த்தொண்டர்க்கு இண்டைமாலை சூட்டிய சிவப்பொருளின் சிந்தனை, இக்காட்சியைக் கண்ட அன்பர்க்கு வாராமல் இராது.

**வாழ்த்துரையும், வரவேற்பும் :**

ஆதீன வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், ஆதீனச் சார்பாக ஓர் வாழ்த்துரையை அமைச்சர்க்கு வாசித்தளித்தார். வரவேற்புரைமொழிந்த துறைசையாதீனத்து மகாவித்வான், திரு. ஆறுமுகநாவலர் அவர்கள் ஸ்ரீவேங்கடசாமி நாயுடுவின் தெய்வநம்பிக்கை, கல்வி, கடவுள், அறம் – இவற்றுக்குச் செய்யும் தொண்டு எனுமிவற்றை விளக்கிக் கனம் அமைச்சர் அவர்களையும், மற்றயாவரையும் ஆதீனத்தின் சார்பில் வரவேற்றார்.

**அமைச்சரின் அறிவுரை :**

''திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ ஆதீனகர்த்தரவர்கள் பல அரிய தத்துவங்களைத் தன்னகத்தேகொண்ட திருமந்திரத்தின்

பெருமையை விளக்க இம்மாநாடு ஏற்பாடுசெய்தது எனக்கு மகிழ்ச்சி தருகிறது. ஆண்டவனை அடைய அநேக உபாயங்கள் உண்டு. அறம், ஞானம், பக்தி, உபதேசமெல்லாம் குருவருள் இல்லையானால் சிறந்தனவாகமாட்டா. இது சைவ, வைணவப் பெரியார்கள்கண்ட பெரிய உண்மையாகும். அநேக குருமூர்த்திகள் தோன்றி அரிய பெரிய அற்புதங்களை நிகழ்த்தி மறைந்திருக்கிறார்கள். அதுபோல அநேக மகாசந்நிதானங்கள் அமர்ந்த இத்திருக்கயிலாய பரம்பரையில், இம்மகாசந்நிதானம் அவர்கள் கூட்டியுள்ள இம்மாநாடுபோல் பெரிய பணிகளை ஆற்றியவர் சிலர்தான். இது எனக்குப் பெருமகிழ்ச்சியை விளைவிக்கிறது.

**நல்லகுரு வேண்டும் :**

கடவுளை அடைய குரு அவசியம். கடவுள் எவ்வளவு முக்கியமோ குரு அவ்வளவு முக்கியம். குருவுக்குக் கடவுளுக்கு மேல் இலட்சணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குருவைப் பார்க்கத் தீக்கைகள் பெறவேண்டும். என்னுடைய தவப் பயனால் எனக்கொரு நல்லகுரு கிடைத்தார்.

**மூன்று உறுதிப்பாடுகள் :**

இங்கே மாநாட்டுக்கு வந்துள்ள அன்பர்கள் எடுத்துக் கொள்ளவேண்டிய உறுதிப்பாடுகள் மூன்று. அவை என்ன என்றால், 1. உலகம் வாழவேண்டும். 2 குரு உபதேசத்தாற் கடவுளை அடைய வழிதேடவேண்டும். 3. நம்முடைய மதம் வளர ஆவன புரியவேண்டும்.

**தனிச்சக்தி :**

இம்மூன்று உறுதிப்பாடுகளை நாம் இன்று எடுத்துக் கொள்ளும்போது நமக்கோர் தனிச்சக்தி பிறக்கிறது. நமக்குத் தலைவராக அமைந்துள்ள நேருஜியோ நேர்மையின் இருப்பிடம். பழைய மகாசந்நிதானம் அனுப்பிய செங்கோலை வைத்துத்தான் அவர் ஆட்சிபுரிகிறார். உலகத்தைக் காப்பாற்றவேண்டிய தனிச் சக்தியைப் பாரதநாட்டில் நாம் வளர்க்கவேண்டும்

**மாநாட்டின் பயன் :**

இத்திருமந்திரமாநாட்டிற்குவந்து அறிஞர்களது அறிவுரைகளைக் கேட்பதனால் நமக்கு அந்தச்சக்தி உண்டாகிறது. அதற்கு நாம் ஆண்டவனுக்கு நன்றிசெலுத்தவேண்டும் என்றகொள்கை நமது உள்ளத்திலே முளைத்துக் கிளைத்துப் புதுமலர் பூக்க வேண்டும்.'' என மொழிந்தார்கள். அமைச்சரது தலைமைப் பேருரைக்குப்பிறகு சொற்பெருக்குகள் மூன்று நிகழ்ந்தன.

**திருமந்திர சங்கற்பணம் :**

ஆதீனப் பிரசாரகர், குலசேகரன்பட்டினம் திரு. வீர. சிவ. சுப்பிரமணியமவர்கள் இந்தத் தலைப்பில் உணர்ச்சி நிறைந்த உரை ஒன்றை நிகழ்த்தினார்கள்.

**மகா சந்நிதானமவர்களின் மாண்புப்பணி :**

இத்தகைய சிறந்ததொரு மந்திர மாநாட்டைத் துவக்கி வைத்து வெற்றிகரமாக நிகழ்த்திய துறைசை யாதீனத்து மகா சந்நிதானமவர்களின் மாண்புப்பணியை என்னென்று சொல்லுவது! காலத்துக்கேற்ற தொண்டு, கருத்துக்களை மறந்து கண் மூடித்தனமாக வாழும் தமிழ் மக்களுக்குத் தக்கதொரு சமய சஞ்சீவி இத்திருமந்திர மாநாடு. இத்தகைய மாண்புப்பணியை மகத்தான முறையிலே காலமறிந்து செய்தருளி இருக்கிறார்கள் மகா சந்நிதானமவர்கள். இந்த உலகமெல்லாம் சிவமயமாக விளங்கவேண்டும் என்ற மகா சந்நிதானமவர்களின் திருவுள்ளக் குறிப்பு விரைவில் திருவருட் பெருக்கத்தால் ஈடேறும் என்பது துணிவு.

**எங்கள் மகா சந்நிதானம் :**

இதனைக் கருத்துட்கொண்டே போலும், பல தமிழ்ப்பணிகளையும், பொதுநலச் சிவப்பணிகளையும் புரிந்துவரும் எங்கள் தருமை ஆதீனக் குருமகா சந்நிதானமவர்களும் மாநாட்டுக்கு அனுப்பியிருந்த 'வாழ்த்துரை நூலில். துறைசை யாதீன மகா சந்நிதானமவர்களின் தொண்டுள்ளத்தைப் பாராட்டி, மாநாடு சிறக்க மதுரைச் சொக்கேசப்பெருமான் திருவருளையும் சிந்தித்து,

" ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையுமெம் ஆதியே''

என்ற திருப்பாடலையும் குறித்திருந்தார்கள்.

**மாநாட்டு மலர் :**

மாநாட்டு மலராகத், திருமந்திரத்து நூறுபாடல்கள், கயிலாய சித்தர் உரையோடும், ஆதீன வித்துவான், த. ச. மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களது பதவுரையோடும் வெளியிட்டு அன்பர்களனைவருக்கும் வழங்கப்பெற்றது. இவ்வாறு திருமந்திர மாநாட்டைச் சிறக்கச்செய்த துறைசையாதீன திருப்பெருந்திரு. மகாசந்நிதானமவர்கள் திருவடிகட்குச் செந்தமிழ் உலகம் மிகவும் கடமைப்பட்டுள்ளது.

**திருமூலர் குரல் :**

தவக்கனலிற் புடம்போட்ட தங்கம். தெய்வத்தமிழ்நாடு செய்த தவமுனிவர் திருமூலதேவர். திருமந்திரத்தின் மூலம் உலகத்துக்குக் கொடுக்கும் குரலோடு இந்தக்கட்டுரையை முடிப்போம்.

'' இவ்வுலகமெல்லாம் உண்ணக்கூடிய ஒருகனி; அது நன்மை தரவல்லது; மென்றால் மெத்தென்றிருப்பது; தின்றால் ஊனும் உயிரும் கலந்து தேனாய் இன்னமுதாய்த் தித்திப்பது; அந்தக் கனிதான் ''நமச்சிவாயம்'' என்ற ஐந்தெழுத்துக்கனி'' என்ற திருமூலர் குரலைத் தமிழகத்துக்குக் கூடி ஒலித்த திருமந்திர மாநாடு வாழ்க. அதனைக் கூட்டியருளிய துறைசை குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகள் வாழ்க.

''ஒன்று கண்டீர்'' இல்வுலகுக் கொருகனி
நன்று கண்டாய் அதுநமச் சிவாயக்கனி
மென்று கண்டால் அது மெத்தென்றிருக்கும்
தின்று கண்டால் அது தித்திக்குந் தானே''

198

# திருவையாறு

## ஸ்ரீ பஞ்சநதீசுவர சுவாமி தேவஸ்தானத்துக்கு

# சென்னை கவர்னர் அவர்கள் விஜயம்

மேன்மைதங்கிய கவர்னர் அவர்கள் தம் குடும்பசகிதம் 22—1—54 மாலை 7-15 க்கு, கோயிலுக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது கீழக்கோபுரவாசலில் மேற்படி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை ஸ்ரீமத் நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள், இந்துமத தருமபரிபாலன டிப்டி கமிஷனர் அவர்கள், தஞ்சை அஸிஸ்டெண்டு கமிஷனர் அவர்கள், தருமபுர ஆதீனம் ஏஜண்டு முதலியோர் இருந்து வரவேற்றார்கள். காரைவிட்டுக் கவர்னரை பூர்ணகும்பத்துடன் முறைப்படி வரவேற்று, மாலை அணிவித்து செண்டுகொடுத்து, ஸ்தலச் சுருக்கம் அச்சாகியிருப்பதும் கொடுத்து மேளதாளங்களுடனும், எடுபிடிகளுடனும் கோயிலுக்குள் அழைத்துச்செல்லப்பட்டது.

கொடிமரத்து விநாயகர் சன்னதியில் தீபாராதனைசெய்து பிரசாதங்கள் வழங்கப்பட்டது. சுவாமி சன்னதியில் கவர்னர் அவர்கள் பெயருக்கு, சதய நக்ஷத்திரத்திற்கு அஷ்டோத்திர அர்ச்சனை செய்து பிரசாதம் வழங்கப்பட்டது. ஓதுவாரவர்கள் திருமுறை ஓதியதும் தேவஸ்தானத் திருமுறை வகுப்புக் குழந்தைகள் தேவாரம் பாடினார்கள். பிறகு சுவாமி சன்னதி தெற்கு வாசல் வழியாக அழைத்துச்செல்லப்பட்டது. சுவரில் இருக்கும் பழங்கால ஓவியங்களைப் பார்த்துக்கொண்டு தனுசு சுப்பிரமணியர் சன்னதியில் வந்ததும் மூர்த்தி விசேஷம் எடுத்துச் சொல்லித் தீபாராதனை செய்து பிரசாதம் வழங்கப்பட்டது. திருமாளிகைப்பத்தி இருக்கும் முறையைக் கேட்டார்கள். அதை விளக்கிச்சொல்லி, தமிழில் அந்தச் சொல்லுக்கும் விளக்கம் சொல்லப்பட்டது. பிறகு சுவாமி சன்னதியில் உள்ள சுதை வேலைகளைப் பார்த்துப் பாராட்டினார்கள். அம்மனுக்குச் சந்தனக்காப்பு சாத்தப்பட்டிருந்தது. அம்மன் சன்னதிக்கு மேளதாளங்களுடன் அழைத்துச்சென்றபோது முன்னால் அமைந்துள்ள மண்டபம் முதலியவைகளைப் பார்த்துப் பாராட்டினார்கள். அம்மன் சன்னதி அடைந்ததும் ஜில்லா கலெக்டர்

அவர்கள் சந்தனக்காப்பு சாத்துப்படியின் விசேஷத்தைச் சொன்னூர்கள். அந்த சாத்துப்படி கலையழகுடன் தெய்வீக அமைப்பாக நன்ருக அமைந்திருப்பதாக எல்லோரும் பாராட்டிப் பேசினூர்கள். தீபாராதனே ஆனதும் பிரசாதம் வழங்கி தேவஸ்தானம் கட்டளைவிசாரணே ஸ்ரீமத் நாகலிங்கத்தம்பிரான் சுவாமி களவர்களால் சாதரா சாத்தி கோயில் மரியாதை செய்யப் பட்டது.

அங்கு தெற்குப்பிராகாரத்துக்கு இறங்கும் இடத்தில் தேவஸ்தானத் தேவார வகுப்புக் குழந்தைகள் நின்று பாடிக் கொண்டிருந்தனர். அவர்களைப்பற்றிச் சொன்னதும் அவர்கள் சுவாமி சன்னதியிலேயே பாடக்கேட்டதாகவும் நன்ருக இருந்த தெனவும் சொன்னூர்கள். அந்த இடத்தில் கவர்னர் அவர்கள் குழந்தைகளுக்கு இனிப்புப்பண்டங்கள் வழங்கினூர்கள். அம்மன் சன்னதியில் அலங்கார மண்டபம் அமைப்பைப் பார்த்தார்கள். அப்பொழுது திருப்பணி செட்டியார் அவர்கள் சார்பில் மாலை அணிவித்தார்கள். தரிசனம் முடித்துக்கொண்டு கிளம்பினூர் கள். அம்மன் கோபுரவாசலில் பிரசாதம் பழங்கள் கொடுத்து வழியனுப்பப்பட்டது.

கோயிலுக்கு விஜயம் செய்ததுபற்றி கவர்னர் அவர்கள் தம் அபிப்பிராயங்களை *Visitors* புத்தகத்திலும் பதிவு செய்திருக் கிருர்கள். அதன் நகல் முன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. கவர்னர் பார்ட்டியுடன் சென்னை ஹைகோர்ட் பிரதம நீதிபதி கனம் ஸ்ரீ பி. வி. ராஜமன்னூர், தஞ்சைஜில்லா நீதிபதி ஸ்ரீ கே. எஸ். வெங்கட்டராமய்யர், ஜில்லாகலெக்டர் ஸ்ரீ டி. கே. பழனியப்பன், கவர்னர் பிரைவேட் செகரட்டரி, காவேரி டிவிஷன் எக்சிகியூடிவ் எஞ்சினீயர், தஞ்சை டிப்டிகலெக்டர் முதலிய அதிகாரிகளும் வந்திருந்தனர். கோயிலில் பொதுஜனங்கள் ஏராளமாய்க் கூடி யிருந்து கவர்னர் அவர்களுக்கு மரியாதைசெலுத்தினூர்கள். கோயில் பூராவும் விளக்குகள் நன்ருகப் போடப்பட்டிருந்தன.

திருச்சி இந்துமத தரும பரிபாலன டிப்டி கமிஷனர் ஸ்ரீ கணேசம்பிள்ளை அவர்களும், தஞ்சாவூர் அஸிஸ்டெண்டு கமிஷனர் ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளை அவர்களும் செய்யப்பட் டிருந்த ஏற்பாடுகளைக் கண்காணித்துவந்ததோடு மிகுந்த உற்சா கத்தையும் தங்கள் யோசனைகளையும் தெரிவித்துக் காரியம் செவ்வனே நடைபெற ஒத்துழைத்தார்கள்.

# கனம் K. வேங்கடசாமி நாயுடு அவர்கள் விஜயம்

## திருபுவனத்தில் காரியாலயத் திறப்புவிழா

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருபுவனம் தேவஸ்தானத்திற்குத் தனியாகக் காரியாலயம் இல்லாமல் கோயில் சந்நிதியிலேயே காரியாலயம் இருந்தமையால் காரியஸ்தர்கள் கஷ்டப்படவேண்டியிருந்ததைத் திருவுளங்கொண்டு சுமார் பதினாலாயிரம் செலவில் ஒரு அழகான – காரியாலய வசதிக்கேற்ற கட்டிடத்தை இராஜகோபுரத்திற்கு அருகாமையில் நிர்மாணித்தார்கள். அதன் பின்பக்கம் கோயிலுக்குவேண்டிய நந்தவனமும் செப்பனிடப்பட்டுக் கட்டளை எஜமான், கார்யஸ்தர்கள் இவர்களுடைய நேர்முகப் பார்வையில் அடிக்கடி இருந்துவர ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இதனைத் திறந்துவைக்க ஹஸ்தவிசேஷம் உள்ளவர்களைத் திருவருளே கொண்டுவந்து உய்விக்கும் என்று திருவுளத்தெண்ணியிருந்தபோது, நமது ராஜ்ய அறநிலையங்களின் அமைச்சர் கனம் ஸ்ரீ கே. வேங்கடசாமி நாயுடு அவர்களை இசைவித்தது திருவருள். அந்த நிலையில் நிகழும் விஜயவாண்டு தைத்திங்கள் 21ம்நாள் (3—2—1954) புதன்கிழமை காலை 10-30 மணியளவில் திறப்புவிழா வைபவம் நடைபெற்றது.

உள்ளூர்ப்பிரமுகர்களும், வெளியூர்ப்பிரமுகர்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். சுவாமிசந்நிதியில் நடைவாகனப்பகுதியிலே பந்தல் அலங்காரம் வெகுஜோராக வழக்கம்போல அமைந்திருந்தது. காலை 9மணிமுதலே பெருங்கூட்டம். ஆலயத்திற்குள் எங்கும் வழக்கம்போலத் தூய்மையும் – தெய்வமணமும் கமழ்ந்தன. மணி 11 இருக்கும். கனம் மந்திரியவர்கள் விஜயஞ்செய்தார்கள். கோபுரவாயிலிலேயே கட்டளை சுவாமிகளும், சீப்சூப்ரண்டு முதலியாரவர்களும், ஏனைய அன்பர்களும் உடனிருந்து மாலைசூட்டிக் கோயில் மரியாதைகளுடன் வரவேற்றனர்.

தெய்வநம்பிக்கையும் – பழைமையில் உறுதியுங்கொண்ட கனம் மந்திரியவர்கள் 11-15 மணிக்குள்ளாகத் திறந்துவைத்து விட்டுப் பிறகு வழிபாடு, கூட்டம் முதலியவற்றை நடத்திக் கொள்ளலாமே என்றார்கள். அவ்வாறே நல்ல நேரத்தில் திறப்புவிழா இனிது நடைபெற்றது. பின்னர் சுவாமிதரிசனத்திற்குக் கோயிலுக்குள் போனார்கள். சிற்பநிலைக்களனான – தெய்வவிளக்கமான திருக்கோயிலில் ஒவ்வொரு பகுதியையும் ஊன்றிப்பார்த்து மகிழ்ந்தார்கள். சுவாமிகளின் அலங்காரங்களில் ஆழங்காற்பட்டுப் பக்தியுடன் வழிபட்டார்கள். பின்னர் மேடைக்குவந்ததும் கூட்டம் தொடங்கியது. கோயில் ஓதுவார்–தேவாரவகுப்பு மாணவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப் பெற்றது. ஸ்ரீமத் சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தேவஸ்தானத்தின்சார்பாகப் பாராட்டிதழ்வாசித்தளித்தார்கள். சோழவளநாட்டின் தனிப்பெருமையான நெல்மாலை சூட்டப் பெற்றது. ஆதீன வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் வரவேற்புரையாக, திருபுவனம் மூன்றுங்குலோத்துங்கனின் பக்திச் சின்னம்; சோழமன்னர்கள் அரண்மனையைக் காட்டிலும் அரன்மனையே ஊழி ஊழிக்காலம் இருக்கவேண்டும் என்ற உள்ளத்துடன் இத்தகைய கோயிலை உண்டாக்கினார்கள்; கலையை அழகுக்காக ரசிக்கும் நிலையைக்காட்டிலும் கலையில் கடவுளைக்கண்டார்கள். அதனாலே இது கலையழகு நிறைந்த கடவுட்கோயிலாக இருக்கிறது; இதன் நிர்வாகம் நடக்க காரியாலயம் இன்றியமையாதது என்பதைத் திருவுள்ளங்கொண்டு இதனைப் பெரும்பொருட் செலவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கட்டுவித்திருக்கிறார்கள். காரியாலயம் இயங்கவேண்டும்; இயக்க ராஜ்ய அறநிலைய மந்திரியையே திருவருள் அமைத்திருக்கிறது. அவர்களும் அதனை நல்லநேரத்தில் திறந்துவைத்து இயக்கினார்கள். இயக்கச்சொற்பொழிவும் ஆற்ற இருக்கிறார்கள் என்று பேசினார்கள்.

கனம் மந்திரியவர்கள் :—

பக்தசிகாமணிகளே ! பெரியோர்களே !! திருபுவனம் மிகப் புராதனமான திவ்யதேசம்; இங்கே உள்ளே நுழைந்ததும் எங்கும் பரிசுத்தமாக இருக்கிறது. சந்நிவேசம் சுத்தமாக இருந்தால் மனச்சாந்தியுண்டாகும்; ஈஸ்வரனிடத்தில் ஈடுபாடும் உண்டாகும். இந்தக் காரியாலயத்தைத் திறந்துவைக்கும்படி

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் என்னை எண்ணியதற்கும் மிக மகிழ்கிறேன். ஆதீன வித்துவான் இந்தக்கோயில் மூன்ருங் குலோத்துங்கன் முயற்சி; பக்தி என்ருர். உண்மை. இதில் ஒரு தத்துவம் இருக்கிறதுபாருங்கள்! அரசன் அரண்மனையைக் கட்டிக்கொள்ளவில்லை; கோயிலைக் கட்டினுன். தன்னிடத்தைச் சுருக்கமாகக்கட்டி பொதுவிடத்தை—குடிகளை நல்வழிப்படுத்தக் கூடிய இடத்தைப் பெருகக் கட்டி வாழ்ந்தான். இதில் உங்களுக்கு என்னதெரிகிறது? மனிதன் தனக்காக வாழ்வதைக் காட்டிலும், பொதுவிற்காக வாழ்வதுதானே நல்லது என்று. ஆகவே தன்னலமற்ற தன்மையாலே விளைந்தது இந்தக்கோயில். நாம் கோயிலுக்குவந்தால் பிம்பங்களில் உள்ள கலையை ரஸிக்க வேண்டும். கலையைக் கையின்வழியாகக் கல்லிலும், செம்பிலும் கற்பகோடிகாலம் அழியாமல் சேர்த்துவைத்திருக்கின்ற சிற்பியின் திறமையைப் பாராட்டவேண்டாமா? அக்கலையைக் கவசங்கள் இட்டும், பூக்களைவாரிச் சாத்தியும், ஆடைகளை அள்ளிப்போட்டும் மறைக்கவேண்டியது அவசியமா? கலையழகு காணும் கோயிற் சுவர்களையும், தூண்களையும், வெள்ளையடிப்பது எனக்குப் பிடிக்கிறதில்லை.

நமது சந்நிதானம் அவர்கள் திருக்கோயில்களைத் தூய்மையாக வைத்திருப்பது மிகச் சந்தோஷம் என்பதைத் திரும்பவும் ஞாபகப்படுத்துகின்றேன். ஆதீனவித்வான் சைவம் வைணவம் இரண்டையும் இருகால்களாகவும் ஒருகால் இல்லையானுல் நொண்டிதான் என்றும் சொன்னுர். நான் கண்களாகக் காதுகளாகக்கூடச் சொல்லுகிறேன். நடுவில் இரண்டுமதங்களுக்கும் உண்டான சண்டையால் சில சீர்கேடுகள் நேர்ந்துவிட்டன. ஆனுலும் இப்போது திருப்பாவை—திருவெம்பாவை, தேவாரம் திவ்யப்பிரபந்தம் இவற்றை இணைத்துப்பேசிச் சிந்தித்துச் சமரசம் பரவும்படியாக ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளவர்கள் செய்துவருகிருர்கள்.

கோயில்காரியம் சரிவரநடக்கக் காரியாலயங்கள் வசதியாக இருக்கவேண்டுவதவசியம். இக்கட்டிடம் புனிதமாக—அமைதியாக—அழகாக இருக்கிறது. இதனைத் திறந்துவைக்கக்கூடிய பாக்கியத்தை எனக்குக் கொடுத்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை மிகமிகப் பாராட்டுகிறேன்; வந்தனம் தெரிவித்துக் கொள்கிறேன் என்றுபேசி முடித்தார்கள்.

பின்னர் திருவார்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், ராஜபாளையம் இராமசாமி ராஜா அவர்கள், A. A. தினன் அவர்கள், கோவை C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், வை. நடேசன் அவர்கள், மதுரை சுந்தரேசபட்டர் அவர்கள், திருச்சி K. C. தியாகராஜன் அவர்கள், சீகாழி S இராமநாத முதலியார் அவர்கள், மாயூரம் A. R. C. அவர்கள் முதலிய பிரமுகர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் வித்துவான் திரு ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் படிக்கப்பெற்றன. அமைச்சர் அவர்களுக்கு அளித்த வாழ்த்துரை வருமாறு :—

**அமைச்சர் பெருந்தகையே! வருக.**

தங்கள் பண்பு அறிந்து அறநிலைய அமைச்சர் பதவி தங்களைத் தேடிவந்தது.

தாங்கள் பதவி ஏற்ற இக்குறுகிய காலத்தில் ஆலயங்கள் அக்காலத்தில் எப்படி தெய்வமணங்கமழும் ஞானக்களஞ்சிய மாக – கலைக்கூடமாக – ஜீவ களைபொருந்திய திருக்கோயில் களாக விளங்கி, ஆத்மஞானம் பரப்பி, தெய்வபக்தி ஊட்டி, மக்களை வளர்த்துவந்தனவோ அந்தநிலையை எட்டிப்பிடிக்க வேண்டுமென்று ஆர்வத்துடன் ஆலயப்பணியாளர்களைத் தாங்கள் பணித்துவரும் பெருமை உலகமறியும். தேவாரங் களும், திவ்வியப்பிரபந்தங்களும், பகவான் நாமமும் எங்கும் ஒலிக்கின்றன. எங்கும் தெய்வசிந்தனையும் சமயப் பேச்சும் இருப்பதைக் காண்கிறோம். பக்திவெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இறை உணர்ச்சி பிரகாசிக்கிறது. இந்தவேகத்தில் போய்க்கொண்டிருந்தால் அந்நாள் வெகுசீக்கிரத்தில்திரும்பும். அதற்கான அறிகுறிகள் நிரம்பக் காணப்படுகின்றன.

இந்த ஆலயம் புராதனமானது. இதைப்பற்றிய வரலாறு தமிழில் முன்னமே வந்துள்ளது. மற்ற அன்பர்களும் அறிந்துகொள்ளும்பொருட்டு ஆங்கிலத்தில் இப்போது வெளி யிடப்படுகிறது. கோயில் முன்மண்டபத்தை அலுவலகமாக உபயோகித்துவந்தது இடைஞ்சலாக இருந்ததால் இதற்கென்று தனிக் கட்டிடம் கட்டி இன்று பெருந்தகையாளராகிய தங்க ளால் திறக்கப்பெறுகிறது.

சொத்து நிர்வாகத்துக்குத் திறமை, நேர்மை வேண்டும். இறைபணிக்கு அவைமட்டில் போதாது. தன்னலமின்மை, அன்பு, ஆர்வம், அச்சம், பக்தி நிறையவேண்டும். எவ்வளவோ நற்பணியிருந்தபோதிலும் இறை பணியில் ஈடுபட வாய்ப்புப்பெறுவது ஒரு பாக்கியமாகும். கிடைத்ததைப் பாக்கியமென எண்ணி, தெய்வ பக்தியுடன் உண்மையாக தெய்வகாரியங்களைச்செய்து. தானும் பயன்பெற்று, மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக இருந்து விளங்கி, தெய்வபலம் நிரம்பப் பெறும்படி இவ்வலுவலகப் பணியாளர்களுக்கு நல்லுரைகூறித் திறந்துவைத்ததற்கு நற்பணிகள் பலவற்றிற்கும் உறைவிடமாயுள்ள தங்களை மிகமிகப் பாராட்டுகிறோம்.

பின்னர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றது.

---

# "Back to God"

### Call by Eisenhower.

President Eisenhower today urged the need for positive acts to show that faith in God was "the surest strength, our greatest resource".

In an address for a "Back to God" radio and television broadcast, sponsored by the American Legion, the President described the Legion programme as the kind of "positive act" of faith needed by this country,

As a former soldier, he said, "I am delighted that our veterans are sponsoring a movement to increase our awareness of God in our daily lives. in battle, they learned a great truth - that there are no atheists in fox holes."

—The Mail, Feb. 7, 1954.

---

# திருக்கடவூரில் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்கு ஸ்ரீ சக்கரதாடங்கப் பிரதிஷ்டை

5—2—54 வெள்ளிக்கிழமை மாலை தாடங்கப் பிரதிஷ்டை நடைபெற்றது. பல ஊர்களிலிருந்து சிவாசாரியர்களும் வைதிகர்களும் ஜெப ஹோமங்களுக்காக வந்திருந்தார்கள். வைதிகக் கிரியைகள் ஒழுங்காக விதிப்படி நடைபெற்றன. அம்பாளுக்குச் சந்தனக்காப்பலங்காரம் சாயக்கொண்டை சகிதம் அழகாகச் செய்யப்பெற்றிருந்தது. அம்பாள் அழகுக்கொருவரும் ஒவ்வாத செல்வியாக விளங்கினாள். அம்பாள் சந்நிதியில் பூப்பந்தலலங்காரம் வெகு சிறப்பாக இருந்தது. மாலை 7 மணி இருக்கும்; ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். நவசக்தி அர்ச்சனையும் பஞ்சமுகார்ச்சனைகளும் நடைபெற்றன. 7-30 மணிக்கு சென்னை அறநிலையப் பாதுகாப்பமைச்சர் கனம் K. வேங்கடசாமி நாயுடு B. A., B. L., அவர்கள் விஜயம் செய்தார்கள். அமுதகடேசர் காலசம்ஹாரமூர்த்தி வழிபாடு முடிந்த பின் அம்பாள் சந்நிதிக்கு வந்தார்கள். தாடங்கம் திருச்செவியில் பிரதிட்டை செய்யப்பெற்றது. அக்ஷரங்கள் இல்லாமலே சத்தியளிக்கக்கூடிய சக்கரம், ஸ்ரீசக்கரம் ஒன்றுதான். அதிலும் கைலாசப் பிரஸ்தாரமாக அந்த கோணங்களில் அமைய வேண்டிய லக்ஷணப்படி ரத்னங்கள் இழைக்கப் பெற்றிருக்குமானால் அதன் மகிமை எவ்வளவு பெரிதென்று தரிசனம் செய்பவர்கள் போற்றிப் பாராட்டினார்கள். இதனை பெரும் பொருட் செலவில் நிர்மாணித்து அம்பாளுக்குச் சாத்திய அளவில்லாத பக்தியையும் பாராட்டினார்கள். அன்று தஞ்சை அரசனுக்கு உண்மையை உணர்த்துவதற்கு அபிராமிப்பட்டருக்காகக் கழற்றிய தாடங்கத்தை இன்று நானூறு வருஷங்களுக்குப் பின் ஞான வள்ளல் தர நல்லமைச்சர் முன்னிலையில் அபிராமி சாத்திக் கொண்டது ஒரு பெருந்தெய்வீகச் செயலாக எல்லாராலும் பாராட்டபட்டது. இவ்விசேஷ நிகழ்ச்சியை முன்னிட்டு தருமபுரம் ஆதீனக் கல்லூரி ஆசிரியர் வித்துவான் சொ. சிங்காரவேலன் 'ஞானப்பால்' என்பது பற்றியும், கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி 'அருள்மாலை' என்பது பற்றியும், தமிழ்ப் பேராசிரியர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'திருவருள்' என்பது பற்றியும், கல்லூரித் துணைத்தலைவர். வித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'அம்மை அருள்' என்பது பற்றியும் பேசினார்கள்.

# தருமபுர ஆதீனப் பிரசாரம்.

4—1—54 அகரமாங்குடி போர்டுபாடசாலை ரிடையர்ட் போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீ வேங்கடராம ஐயர் அவர்கள் தலைமையில் திரு. மருணீக்கியார் 'திருவெம்பாவையும் திருநாவுக்கரசரும்', ஸ்ரீ P. S. சீனுவாச ஐயங்கார் 'திருவெம்பாவை'.

5—1—54 சூலமங்கலம் சிவாலயம் திரு. T. P. மகாதேவக் குருக்கள் 'பக்தி' மருணீக்கியார் திருவெம்பாவைக் கருத்துரை. ஷை ஊர் கிராமமணியம் திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயர் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

6—1—54 ஐயம்பேட்டை குடமுருட்டியாற்றுப்பாலக்கரை விசுவநாதர்கோயில்; மருணீக்கியார் 'தமிழகமும் பாவையும்'

8—1—54 மட்டியாந்திடல் சிவன்கோயில்; தில்லையம்பூர் திரு. ஞானசபாபதி வாண்டையார் தலைமையில் மருணீக்கியார் திருவெம்பாவை, B. S. சீனுவாச ஐயங்கார் 'திருப்பாவை'.

9—1—54 தஞ்சை பாஸ்டர்ஸ்கூல்; மருணீக்கியார் ஆலய வழிபாட்டைப் பற்றிப்பேசினார். ஷை ஸ்கூல் மாணவர்கள் திருவெம்பாவை திருப்பாவை பாராயணத்துடன் மார்கழிமாதம் முழுவதும் தஞ்சை ராஜவீதி ஐயன்கடை வீதிவழியாக வலம் வந்தது மிகச்சிறப்பாக இருந்தது.

திருப்பாலைத்துறை கிருஷ்ணமடத்தில் இரவு எட்டுமணிக்கு ராஜகிரிஹைஹஸ்கூல் தமிழாசிரியர் திரு. வயித்தியலிங்கம் பிள்ளை தலைமையில் மருணீக்கியார் திருவெம்பாவைப் பிரசங்கம் செய்தார். திராவிடக்கழகத் தலைவர் மாரியப்பக் கவுண்டர் பிரசார கோஷ்டியை வரவேற்றுப் பேசினார். ஹெல்த் அஸிஸ்டெண்ட் K. R. நாராயணசாமிப்பிள்ளை சைவசமயச் சிறப்பை விளக்கினார்கள்.

10—1—54 பாபநாசம் ஸ்ரீ வித்யா பாடசாலையில் நடந்த திருவெம்பாவை திருப்பாவை மாநாட்டில் கலந்துகொண்டு மருணீக்கியார் 'திருவெம்பாவையும் மணிவாசகரும்' என்பது பற்றிப் பேசினார்.

தஞ்சை மாரியம்மன்கோயிலில் நடைபெற்ற மகாநாட்டிலும் அன்றிரவு கலந்துகொண்டு ஆலயவழிபாட்டின் பரிபாலனத்தைப் பற்றிச்சொற்பொழிவாற்றினர்.

*11—1—54* ஒள்பத்துவேலி நவநீதகிருஷ்ணன் கோயில்; ஷெ கோயில்நிர்வாகி சீனுவாச முதலியார் தலைமையில் மருணீக்கியார் 'திருவெம்பாவை' B. S. சீனுவாச ஐயங்கார் 'திருப்பாவை' ஷெ கோயில் மானேஜிங் டிரஸ்டி G. அழகப் பிள்ளை, பாவைகளைச் சிறப்பாக ஓதிய அரங்கநாதனுக்குப் பரிசு வழங்கினர்.

*14—1—54* திருக்கருகாவூர் முல்லைவனநாதர் கோயில்; திருவாசகவிழா நடைபெற்றது. மாணிக்கவாசகர் வீதியுலாக் காட்சி. இரவு 8மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞான சம்பந்த சுவாமிகள் நூல் நிலையத்தில் தலைவர் சிவஸ்ரீ விசுவநாத குருக்கள். மருதநாயகம் பிள்ளை 'வழிபாடு" ஐயாறு தேசிகர் அருள்நெறி, பாலு ஆச்சாரியார் 'திருவெம்பாவை' ஸ்ரீ மகா தேவக் குருக்கள் 'கடவுள் வணக்கம்'

*15—1—54* கரம்பத்தூர் பாரதி சேவாசங்கம் ஸ்ரீவரதராஜப் பெருமாள்கோயில் சந்நிதி திருவாசகத் திருவிழா. மருணீக்கியார் தலைமைவகித்துத் திருவாசக விழா கொண்டாடுவதின் அவசியத்தை விளக்கிப் பேசினர். B. S. சீனுவாச ஐயங்கார் 'குன்றக்குடி அடிகள் ஆற்றிவரும் சமயப்பணி' உள்ளூர் மாணவர்கள் சிவபுராண பாராயணம் செய்தனர்.

மிலட்டூர் தக்ஷிணாமூர்த்தி விநாயகர் சந்நிதியிலும் ராஜப்பா ஐயர் தலைமையில் மருணீக்கியார் 'திருவாசகத்தேன்' என்பது பற்றிப் பேசினர்.

*16—1—54* மிலட்டூர் ஒண்ணுவது சேத்தியில் சேரிப் பிரசாரம் நடைபெற்றது. மருணீக்கியார் 'நாட்டின்நிலைமை' B. S. சீனுவாச ஐயங்கார் அன்பும் ஆசாரமும்; ஷெயூர் முனியாண்டி நன்றி கூறினர்.

அவளிவணநல்லூரில் 3-2-54 அன்று ஆதீன சமயப்பிரசாரம் நடைபெற்றது. தஞ்சை ராஜாராம் சாகேப் அவர்கள் தலைமை யில் கருகாவூர் சமயத்தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்கள் பன்னிரு திருமுறைப் பெருமைகளை விளக்கிப்பேசினர்கள்.

சுந்தரப்பெருமாள் கோயிலில் 23—1—54 தேதி அன்று இவ்வூர்ப் பெருமாள் கோயிலில் ஆதீன சமயப் பிரசாரம் நடைபெற்றது. வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள், வித்துவான், வி. சா. குருசாமி அவர்கள் முதலியோர் கடவுட்கொள்கையை வலியுறுத்திப் பேசினர். திருக்கருகாவூர் சமயத்தொண்டர் திரு. மருணீக்கியார் அவர்களும் மற்றும் பல அறிஞர்களும் பேசி மகிழ்வித்தனர். கூட்டத்துக்குப் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

குத்தாலத்தில் 8—1—54 அன்று குத்தாலம் ஸ்ரீ சொன்னவாறறிவார் தேவாலயத்தில் தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டியாரால் திருவெம்பாவை மாநாடு நடத்தப்பெற்றது. இரண்டாம் நாள் குத்தாலம் கழக உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. நாகரத்தினம் பிள்ளை அவர்கள் B. A., L. T., தலைமை தாங்கினார்கள். திருவாரூர் இராஜன் கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்பு பிரசங்கம் செய்தார்கள். பிறகு ஷை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. இராமதேசிகாச்சாரியார் அவர்களும் சமஸ்கிருத ஆசிரியர் திரு. வித்துவான், பொன்னுசாமிப் பிள்ளை அவர்களும் ஷை பள்ளி ஆசிரியர் திரு. முருகையாப்பிள்ளை B. A., L. T., அவர்களும் வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்களும் பேசினார்கள். திருவெம்பாவை, திருப்பாவை இலவச வெளியீடுகள் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றன.

திருபுவனத்தில் 9—1—54 அன்று திருவாரூர் இராஜன் கட்டளை கட்டளை விசாரணை ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் தலைமையில், ஆதீன ஆசிரியர் வித்வான், சொ. சிங்காரவேலன் அவர்களும் மாணவர்கள் திரு. க. வேலாயுதம், திரு. சா. ஞானப்பிரகாசம் இருவரும் திருவெம்பாவையின் மேன்மையைப்பற்றிப் விரிவாகப் பேசினார்கள். ஆதீன ஓதுவார்கள் திருவெம்பாவை ஓதினார்கள். இலவச வெளியீடுகள் வழங்கப்பெற்றன.

திருப்பனந்தாளில் 10—1—54 அன்று திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரர் சுவாமி கோயிலி[illegible] தருமபுர ஆதீனப் பிரசார கோஷ்டியாரால் திருவெம்பா[illegible] மாநாடு நடத்தப்

பெற்றது. தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மாணிக்க வாசகத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினார்கள். திருவாரூர் இராஜன் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமை தாங்கினார்கள். திருவெம்பாவை திருப்பாவைகளின் தெய்வீகக் கருத்துக்களைத் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களான வித்துவான், திரு. சுந்தரேசம்பிள்ளை அவர்களும். வித்துவான், திரு. கோவிந்த ராஜன் அவர்களும் வித்துவான், திரு. வெள்ளைவாரணம் அவர் களும் விரிவாக எடுத்துப் பேசினார்கள். பேரளம் கழக உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. பக்தவத்சல முதலியார் அவர்களும் சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. சேது சுப்பிரமணியப் பிள்ளை அவர்களும், தருமபுர ஆதீனக் கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு வி. சா. குருசாமி அவர்களும் திருவெம்பாவை திருப்பாவைகளின் கருத்துக்களை எடுத்து விளக்கினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றியுரையுடன் மாநாடு இனிது முடிவுற்றது.

## தருமபுரம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு ஏகதின லட்சார்ச்சனை

இன்று தைமாதத்திய கடைசி வெள்ளிக்கிழமை யானதால் தருமபுரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மகா லட்சுமி துர்க்காதேவிக்கு ஏகதின லட்சார்ச்சனை வெகுசிறப்பாக நடைபெற்றது, இரவு 11 மணிக்கு அர்ச்சனை முடிந்து பூர்த்தி தீபாராதனை நடைபெற்றது. அலங்காரம் வெகுசிறப்பாக நடை பெற்றது. அநேக பக்தகோடிகள் வந்து தரிசித்துஉய்ந்தனர்.

திருநெல்வேலி, தருமபுர ஆதீன மடாலயத்தில் நடை பெறும், தருமை அருள்பெறு அருணகிரி இசைக் கழகத்தின் தமிழ்த்திருநாளில் சமயநாள் நிகழ்ச்சியில் ஆதீனத்தின் சார்பாக வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'சிவபோகசாரம்' என்பது பற்றியும், வித்துவான் திரு, ச. தண்டபாணி தேசிகர் 'முத்திநிச்சயம்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

## சென்னை

### தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

### வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி இறைபணி மன்றத்தில் நடந்த

# பொங்கற் புதுநாள் நிகழ்ச்சி

வளங்கொழிக்குந் திருநாள், மக்கள் உளத்தில் உவகை பொங்குந்தனிப் பெருநாள், அந்நாளே பொங்கற் புதுநாள். ஒவ்வொரு வீட்டிலும் பால் பொங்குகிறது. பால் போன்ற உள்ளமும் பொங்குகிறது. நாம் இவ்வளமெல்லாம் இனிதே பெறக்காரணமாயுள்ளவன் இறைவனல்லவா? அவ்விறைவனை இந்த நேரத்தில் நினைந்து நன்றி தெரிவித்துக் கொள்ளுதல் தமிழர்களின் தலையாய கடமையாகும். இக்கருத்தினைத் திருவுளங் கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி 14—1—54 வியாழக்கிழமை மாலை ஐந்தரை மணிக்கு ஷை நிலையத்தில் பொங்கற் புதுநாள் கொண்டாடப் பெற்றது. விழாவிற்கு ஸ்தல ஸ்தாபன மந்திரி, கனம் K. இராஜாராம் நாயுடு அவர்கள் தலைமை வகித்தார்கள். "பொங்கற் புதுநாள்" என்பதுபற்றி சென்னை அரசாங்கக் கல்லூரித் துணை ஆங்கிலப் பேராசிரியர், திரு. R. S. தேசிகன் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அனைவரையும், வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் வரவேற்றார்கள். திருமுறை ஆசிரியர் சங்கீத பூஷணம், P. சுவாமிநாதன் கடவுள் வணக்கம் பாடினார். திரளான மக்கள் விழாவில் அமைதியுடன் கலந்துகொண்டனர்

மந்திரியவர்கள் கூறியதாவது. மடாதிபதிகளைத் துவேஷ மனப்பான்மையுடன் நோக்குகின்றனர் ஒருசிலர். ஒருசிலர் துவேஷத்தால் நாத்திகம் வளர்ந்து உச்சநிலையை அடைந்தது. நுனிக்கொம்பில் ஏறியவன் அதற்குமேலும் செல்ல நினைத்தால் கீழே விழவேண்டியதுதான். இன்று நாத்திகர் நிலை இப்படித்தானிருக்கிறது. கடமையை உணர்ந்து காலத்திற் கேற்பத்தொண்டு புரியும் தருமையாதீனத்தாரைப் பாராட்டு

கிறேன். எல்லாம் தெரிந்தவர்கள், உள்ளக் கோயிலில் இறைவனைக் காண்பார்கள், காடு மலை எங்கிருப்பினும் கடவுள் உருவத்தைக் கருத்தில் அமைத்து வழிபடுவார்கள். ஆனால் பண்புகிட்டப்பெறாத மக்கட்கு விக்ரக ஆராதனை மிக மிக அவசியம், தமிழர்கள் எப்பொழுதுமே கடவுள் நம்பிக்கையுடையவர்கள், பண்பாட்டில் தலைசிறந்தவர்கள். திண்ணை வைத்து வீடுகட்டுதல், அச்சுக்காகிதத்தையும் மிதியாதிருத்தல், தவறி மிதித்தாலும் உடனே வணக்கம் செலுத்துதல், இவை ஒரு சில எடுத்துக்காட்டுகள். அத்தகைய தமிழர்களிடத்தில் தான் சில ஆண்டுகளாக நாத்திகம் தலை விரித்தாடியது. நுனிக்கொம்பு ஏறியது, இன்று இறங்கத் தலைப்பட்டிருக்கிறது. அவர்களும் கடவுளில்லை என்றும், கோயிலை இடிக்க வேண்டும் என்றும் சொல்லவில்லை. கோயில் பொது மக்கட்குப் பயன்படவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம் என்கிறார்கள். கோயில்கள் என்றுமே பொதுமக்கட்குப் பயன்பட்டுதான் வந்திருக்கிறது. இவர்களுக்கு வேண்டுமானால் புரியாதிருக்கலாம், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பது பழமொழி. கடவுளை நம்பிய ஏழைமக்கட்குக் காற்றிலும், மழையிலும், வெள்ளத்திலும். கோயில்தான் புகலிடமாக இருந்து வருகிறது. கடவுளை நம்புங்கள் என இராஜாஜி அரசியல் பிரசாரத்திலெல்லாம் குறிப்பிட்டார். என்ன! அரசியலில் இருந்துகொண்டு பஜகோவிந்தம் பாடச்சொல்கிறாரே என்றனர் ஒருசில மக்கள். கடவுள் நம்பிக்கைதான் இன்று மழைவளந்தந்து நம்மை மகிழ்விக்கிறது. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தல்" என்பது பழமொழி. நம்பிக்கையோடு கொண்டாடு மிடத்திலெல்லாம் வளம் கொழிக்கிறது. வளமெல்லாம் வீடுவந்துசேரும் நாள் பொங்கல்நாள். இந்நாளில் நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். நன்றி தெரிவிக்க வேண்டிய அமைப்பிலேயே பொங்கல் நாளை முன்னோர்கள் கொண்டாடினர். உழைத்த உழவுக்காளைகட்கு விழாவெடுத்தனர். சீதோஷ்ண நிலையைத் தக்கவாறு அமைத்துக் கொடுத்த சூரிய மூர்த்தியை வழிப்பட்டனர். நாமும் அவ்வழிச் செல்வோமாக.

நமது இந்து சமயம் எம்மதத்திற்கும் சம்மதம் கொடுத்துத் துவேஷமில்லாமல் ஆலமரம்போல் பரந்திருப்பதால்தான் எல்லாமதங்கட்கும் தாயாக விளங்குகிறது. எல்லா மதங்களும் கடவுளை வழிபடவேண்டுமென்றுதான் சொல்கிறது மதப் பூசல் இல்லாமல் அவரவர்களும் கடவுளைத் தொழலாம். மதத்தை ஒருவராலும் அழிக்கமுடியாது. இங்கர்சால் பெரிய நாத்திகவாதி. கடவுள் நம்பிக்கையை நாட்டைவிட்டு விரட்ட வேண்டுமெனப் பல நாடுகளிலும் மன்றங்கள் அமைத்துப் பிரசாரம் செய்தார். ஆனால், அவர் இறக்கும்போது என்னை ஒரு சக்தி பிரிக்கிறது. அச்சக்தியைத்தான் கடவுள் என்று சொன்னார்கள் போலும் எனத் தமது சீடர்களிடத்தில் சொன்னார். அதோடு, இரணியன், சிசுபாலன் போன்றவர்கள் எல்லாம் அவ்வப்போது தோன்றிக் கடவுள் இல்லை என நிரூபிக்க முற்பட்டனர். ஆனால் அவர்கள் கண்டதுதோல்வியே. ஆகவே நாம் கடவுள் நம்பிக்கையுடன் வாழவேண்டும். அந் நம்பிக்கையை வலியுறுத்துவதே இத்தகைய விழாக்கள் என எடுத்துரைத்தார்கள்.

R. S. தேசிகன் அவர்கள் பேசியதாவது:— உணவு வளமில்லையானால் வாழ்க்கை இன்பகரமாயிராது. இதனாற்றான் அடியார்க்கு நல்லார். "சோற்றுச் செருக்கல்லவோ......உரை செய்வித்ததே" என்றனர். ஆகவே உணவுவளம் வீடுவந்தடையும் இப்பொங்கல் விழாவில் கடவுளுக்கு நன்றி தெரிவிப்போமாக. கடவுள் உருவ அமைப்பில் -வழிபாட்டு முறையில் - எவ்வளவோ உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. பொங்கற் புது நாளைப்பற்றிச் சங்க இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் சிறப்பித்துப் பேசுகின்றன. சூரியன், மேகம் இவற்றுள் இறைவன் கலந்து நிற்கிறான். இதனாற்றான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் கடவுள் வணக்கத்தில், மாமழை, திங்கள் முதலியவற்றினுக்கு வணக்கம் செலுத்துகிறார். தாயுமானார் "மலர்தொறும் நீயே இருத்தி" ஆகவே எப்படி மலர்களை எடுத்து உனக்குப் பூசைபுரிவது என்றார். இப்படியெல்லாம் நுணுகி ஆய்ந்த பெருமக்கள் வாழ்ந்தநாடு நந்தமிழ்நாடு. நன்றியறிதலுடையநாடு, நமது செந்தமிழ்நாடு: என நவின்றனர்.

பிறகு, திரு. கெஜபதி நாயகர் M. L. C. அவர்கள் பேசினார்கள். நாட்டில் அறிவு வளர்ந்தால் பயனில்லை; அன்பு வளர வேண்டும், மேலும் அவ்வன்பு அருளாகப்பரிணமிக்க வேண்டும். அப்போதுதான் நாடு சுபிட்சமடைய முடியும். இப்பண்பினை நமக்கு உணர்த்துவது நமது சிவாலயம். இறைவன் அறிவு, மயமானவன்: அம்மை அன்பு, மயமானவள்: முருகன் அருள், மயமானவன்: இவற்றை ஒருசேரக் காணவேண்டுமானால் சோமாஸ்கந்தமூர்த்தியிடத்தில் காணலாம். பிரித்துக்காண்பதால் பயனடையமுடியாது. ஒற்றுமையால் நலம் பலஉண்டு. ஒற்றுமையை உணர்த்துவதே கடவுள் நெறி, மேற்கூறிய மூன்று பண்புகளும் எல்லா மக்களிடத்திலும் அமையவேண்டும் என்பதை அறிவிப்பதே சமயநெறி, என அழகுறப் பேசினார்.

இரவு ஏழரைமணிக்கு சங்கீதவாணி. திருமதி, M. L. வசந்தகுமாரி, குழுவினர் தமிழிசையரங்கு நிகழ்த்தினர். இசையரங்கில் பல செந்தமிழ்ப்பாடல்களையும், சில தேவாரத் தீஞ்சுவைப்பாடல்களையும் பாடி மக்களனைவரையும் மகிழ்வித்தனர்.

இறுதியில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கும்போது தமிழிசையைக் காத்துக் கொடுத்த பெருமை தேவாரத்திற்கே உரியது என்றும். அவ்வருந்தமிழ்ப் பாடல்களை இசையரங்குதோறும் நன்றிக்கு அறிகுறியாகப் பாடப்பெறவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

14

**மகாமகோபாத்யாய, டாக்டர்**
**உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்**
**அடையாறு, சென்னை-20.**

# பெரியபுராண விரிவுரை நிகழ்ச்சி

*10-1-54* ஞாயிற்றுக்கிழமை அன்று இரவு $6\frac{1}{2}$ மணிக்கு "சுந்தரர் ஆரூர் சேறல்" என்பதுபற்றி வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சொற்பொழி வாற்றினார்கள். சொற்பொழிவில், முன்னோர் சென்ற வழியைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதைத் திருவதிகை வீரட்டா னத்தையும் சீகாழியையும் தல எல்லையில் நின்றே வணங் கியதன் மூலம் சுந்தரர் நமக்கு அறிவிக்கின்றார் என்றும், "ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள" என்ற அநுபூதிப் பாடலால் வழிபாட்டு முறையினைச் சேக்கிழார், சுந்தரர் வாழ்க்கையில் அமைத்து அறிவிக்கிறார் என்றும், ஆரூரர் ஆரூரை அணுகிய உடனேயே இறைவனைத் தோழமையுடன் பாடத்தொடங்குவதால், இறைவன் தொண்டர்களிடத்தில் தோழனாக இருப்பவன் என்பதனைப் புலப்படுத்துகின்றார் என்றும் அறிவித்தார்கள்.

*17—1—54* ஞாயிற்றுக்கிழமையன்று இரவு $6\frac{1}{2}$மணிக்கு "பரவையார் திருமணம்" என்பதுபற்றி கயப்பாக்கம், திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் பேசினார்கள். அவர்கள் குறிப்பிட்டதாவது, உயர்ந்த நிலையில் வாழும் தொண்டர்கள் வாழ்க்கைமுழுதும் தெய்வமணங் கமழும் என்றும், அதற்கு எடுத்துக்காட்டு சுந்தரருடைய வாழ்வு என்றும். காதல் வாழ்வினும் கடவுள்நெறியினை அறிவுறுத்தும் பண்பாடு நாயனாரிடத்தில் ஒளிவிடுவதைப் பரவையார் திருமணம் பாங்குற விளக்குகிறதென்றும், விரித்துரைத்தார்கள்.

*24—1—54* ஞாயிற்றுக் கிழமை இரவு $6\frac{1}{2}$-மணிக்குத் "தில்லை வாழந்தணர்" என்பதுபற்றிப் பேசிய கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள், தில்லைக்கூத்தன்

திருவடி மறவாத் தவம் இயற்றுவோராய், கற்றுங்கு ஏரியோம்பிக் கலியை வாரமே செற்றூராய், அகம்படித் தொண்டர்களாய், ஒழுக்கம்மாறுதவர்களாய், அறுதொழிலால் அருங்கலி அகற்றியவர்களாய், சிவனருளே பெறும்பேறு என வாழ்வோராய், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறியும் நவையறத்தெரிந்தோராய், இல்லற வாழ்வினராய், இறைவனைப் பூசிக்கும் பேறுபெற்ற மூவாயிரவர்களே தில்லைவாழந்தணர்கள் எனக் குறிப்பிட்டார்கள்.

31—1—54 ஞாயிற்றுக்கிழமை இரவு 6¼-மணிக்குத் "திருநீலகண்ட நாயனுர்" என்பதுபற்றிப் பேசிய கயப்பாக்கம் திரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், திருநீலகண்டநாயனுர் இறைவனது நீலகண்டத்தில் அளவிலா அன்புகொண்டவர் என்றும், அதனுற்றூன அவரது புற ஒழுக்கங்கண்ட மனைவி யாரும் அவரைத் திருத்துதறகு அவர் உயிரெனப்போற்றும் நீலகண்டத்தின்மீது ஆணையிட்டனர் என்றும், ஒவ்வொரு குலத்தினரும், தொழிலினரும் குலத்திற்கும் தொழிலிற்கும் ஏற்ப அறம் செய்யவேண்டும் என்பதை நாயனுர் வரலாறு நன்குவிளக்குகிறது என்றும், தொண்டர்கள் இளமையையும், வைராக்கியத்தையும் வழுவாது காக்கவேண்டும் என்பதைத் தெரிவிப்பது திருநீலகண்ட நாயனுர் வரலாறு என்றும் விளக்கிப் பேசினுர்கள்.

7—2—54 ஞாயிற்றுக்கிழமை இரவு 6-30 மணிக்கு "இயற்பகை நாயனுர்" வரலாறுபற்றி கயப்பாக்கம், திரு. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் பேசும்போது, உலக இயற்கைக்குமாறுன வகையில் இறைவனிடம் அன்புசெலுத் தியதால் "இயற்பகை நாயனுரெனப் பெயர் பெற்றூரென்றும், இல்லை என்று சொல்லாத இலட்சியத்தைக் கைப்பற்றியதால் தனக்கொப்பாகிய தலைவியையே இறைவேடம் பூண்ட அடிய வருக்குமனமுவந்து ஈயத்தலைப்பட்டார் என்றும் இலட் சியத்தை உயரிய முறையில் கைம்மாறு கருதாமல் செய்தமை யால் இறைவனே இயற்பகையாரிடத்தில் அபயம் கோரினு ரென்றும், தெரிவித்தார்கள்.

216



திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடம் இளவரசு, வித்துவான்,

## ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

### சென்னை

## சமயப்பிரசார நிலையத்திற்கு விஜயம்

*26-1-54* அன்று ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் காசிக்குச்சென்று திரும்பி வரும்போது சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்திற்கு விஜயம்செய்தார்கள். நிலையச் சார்பில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மாலை யிட்டு வரவேற்றார்கள். நிலையத்தில் பயின்றுவரும் திருமுறை வகுப்பு மாணவ மாணவியர் திருமுறை பாடியதைக் கேட்டு உளமகிழ்ந்தார்கள். குழந்தைகட்கு இனிப்பும் வெண்பொற் காசும் அருளி, இளமையில் நல்ல கருத்துக்களடங்கிய திருமுறைகளைப்பயிலுதல் நன்மைபயக்குமென்றும், அடக்கம், பொறுமை நமது பெண்மணிகளுக்கு இயற்கையாகவே அமைந்த அணிகலம் என்றும், ஆசிரியர், பெரியோர் சொல்படி நடக்க இளமையிலேயே பழகவேண்டுமென்றும் ஆசி புகன் றார்கள். நிலையச் சார்பில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். அன்றுகாலை உந்தூர்திமூலம் திருக்கழுக்குன்றம், மகாபலிபுரம் முதலிய இடங்கட்கு ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமி கள் அவர்களும் உடன் வரச் சென்று தரிசித்து வந்தார்கள்.

---

### அட்டைப்பட விளக்கம்:

*நீங்கள் காண்பது திருவாவடுதுறை - ஸ்ரீ கோமுத்தீஸ்வர சுவாமி கோயில் கோபுரமும், கோமுத்தி தீர்த்தமும். பக்கத் திலே அடர்த்தியாக இருப்பது படர்அரசு. இந்தநிழலிலேதான்* **திருமூலதேவ நாயனர்** *சிவயோக சமாதியில் எழுந்தருளி யிருந்து திருமந்திரத்தையருளிச்செய்தார்.*

# திருவாவடுதுறை ஆதீனத் திருமந்திர மாநாட்டில்

## அறநிலைய மந்திரி உரை

"இந்த மகாநாடு தமிழ்நாட்டில் முதன்மை பெற்றதாகும். மதப் பிரசாரத்திற்கு இம்மாநாடு செய்யும் பணி சாதாரணமல்ல. அருள் நிறைந்த இடத்திலிருந்து புறப்படும் நெறிமொழிகள் மிகவும் பயனளிக்கக் கூடியவை. மதப் பிரசாரத்திற்கு மகா சந்நிதானம் செய்துவரும் சேவை நம் யாவராலும் மிகவும் நன்றியுடன் போற்றுதற்குரியது. இதற்கு மக்கள் யாவரும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளனர். மதப் பிரசாரத்திற்குக் கோவில் மாத்திரம்போதாது. நாம் கர்மங்களைச் செய்கிறோம். பக்தி செய்கிறோம். குரு உபதேசமில்லாமல் போனால் ஒன்றும் பலிக்காது. பகவானை அறிவது கஷ்டம். முக்கிய உபாயம் குரு உபதேசம். ஆகவேதான் நம் நாட்டில் மகா சந்நிதானங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்களின் பொறுப்பு மிகவும் பெரியது, இந்த ஆதீனத்தைப்பற்றி எனக்கு ஒரு பெரிய சந்தோஷமுண்டு. நல்லமுறையில் பிரசாரகர்களை நியமித்து மதத் தத்துவங்களை அவர் பரப்பி வருவதேயாகும். இந்த தடவைதான் மகா சந்நிதானத்தை நான் முதன்முதல் தரிசித்தது. அவருடைய உற்சாகமும் ஆர்வமும் ஆச்சரியமாக இருந்துவருகிறது. ஸ்ரீ ராமானுஜர் திருமந்திரத்தின் தத்துவத்தைக் கோபுர உச்சியிலிருந்து உலகம் உய்யுமாறு அருளினார்.

மந்திரி மேலும் கூறினார்: நாம் மூன்று பிரதிக்ஞைகளைச் செய்துகொள்ள வேண்டும். முதலாவது ஆண்டாள் சொன்னது போல் வையம் வாழவேண்டும்; நம்முடைய கொள்கையினால். இரண்டாவது பகவானை அடைய வேண்டுமென்கிற சங்கற்பம் இதுதான். தீக்ஷையின் தத்துவம். மூன்றாவது நமது மதம் வளரவேண்டும். ஆஸ்திகம் வளரவேண்டும்.

நடுநிலைமை வகிக்கும் மதசார்பற்ற அரசாங்கத்தால் செய்ய முடியாததான பெரிய வேலைகளை மடாதிபதிகளால் செய்ய முடியும். திறம்பெற்ற கோவில் அதிகாரிகள் ஒன்றுசேர்ந்து


268



செய்யமுடியும். அவ்வதிகாரிகளுக்கு மனதில் உண்மையான உணர்ச்சியையூட்டக்கூடியவர்கள் மடாதிபதிகளேயாவார்கள். நம் கோயில்களும் மடங்களும் நம் பெரும் பொக்கிஷங்களாகும். கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்க வேண்டும்.

## அனாதை விடுதிகள்

இப்போது 20 ஸ்தலங்களில் குழந்தைகளை வைத்து அனாதை விடுதிகளில் காப்பாற்றப்பட்டு வருகிறது. 600 குழந்தைகள் இருக்கிறார்கள். 600 குழந்தைகள் இருந்தால் போதுமா என்று நினைக்கலாம். மதத்தின் பெயரால் பாதுகாக்கிறோமே என்ற பெருமைதான் நமக்கு. இதர மதத்தினர்கள் இதைப் பெரிய அளவில் செய்து வருகின்றனர். சின்ன வயதில் குழந்தைகளை நம் கிரந்தங்களைப் படிக்கச் செய்வதுதான் பெரிய காரியம். ஜனங்களின் மத உணர்ச்சி வளரவேண்டும். அமெரிக்காவில் சர்ச்சுக்குப் (கோவிலுக்கு) போய் வணங்காமல் ஒரு காரியமும் செய்வதில்லை. பிரிட்டிஷ் ராணியின் மகுடாபிஷேகமே ஒரு சர்ச்சில்தான் நடைபெற்றது. நம் தேசத்திலோ கடவுளைத் திட்டினால் குற்றமே கிடையாது. இங்கிலாந்தில் அரசாங்கத்தைத் திட்டினால் அது பெரிய குற்றமாகும். இங்கோ பகவானையே திட்டுகின்றனர்! அது பெரும் குற்றமாகும். தேசத்துரோகமான செயலுமாகும். ஆதீனத்தின் வேலை எனக்குப் பெரும் மகிழ்ச்சியை யளிக்கிறது''



ஸ்ரீ சக்ரதாடங்கம்

# ஸ்ரீ சக்ரதாடங்கம் விளக்கம்

சர்வானந்த மயமான மகாவிந்துவில் காமேசுவரரின் இடது தொடையின்மேல் பராசக்தி எழுந்தருளியிருக்கிறாள். அவள் முடி சந்திரகலையால் ஆக்கப்பட்டது. திருக்கரங்கள் பாசம், அங்குசம், கரும்புவில், புஷ்பபாணம் இவற்றை ஏந்தி விளங்குவன. உதிக்கின்ற சூரியனை ஒத்த நிறமுடையவள். இவளுடைய கண்கள் மூன்றும் முச்சுடர். அதனை அடுத்துள்ள அஷ்டகோணம் சர்வரோக ஹர சக்ரம் என்று பெயர்பெறும். அவற்றில், வசினி, காமேசுவரி முதலிய சத்திகளென்டர். மாலைச் செஞ்சூரியனைப்போன்ற நிறத்துடன் விளங்குகின்றார்கள். இது தேவிபுரியஷ்டகசரீரம். அதனை அடுத்து வெளிப்பக்கமாய் உள்ள சக்கரம் சர்வரக்ஷாகரம் எனப்படும். அதில் சர்வக்ஞா; சர்வசக்தி முதலிய பத்து சத்திகள் வசிக்கின்றார்கள். இவர்கள் நிகர்ப்பயோனிகள். அதனை அடுத்திருப்பது பகிரந்தசார சக்ரம். இது சர்வார்த்த சாதகம் என்று அழைக்கப்பெறும். இதில் சர்வ சித்ரப்பிரதை முதலிய பத்து சத்திகள் பரதேவதையின் ஞானேந்திரிய கன்மேந்திரியங்களாக விளங்குகின்றார்கள். அதனை அடுத்து வெளிப்பக்கமாக இருப்பது சர்வ சௌபாக்ய தாயக சக்ரம். இதில் சர்வசம்க்ஷோபணி முதலிய 14 சக்திகள் வசிக்கிறார்கள். இதனை அடுத்திருப்பதுதான் அஷ்டதளபத்மம். இதற்குச் சர்வசம்க்ஷோபணி சக்கரம் என்று பெயர். இதில் அழகே வடிவமான குப்ததர யோகினிகள் வசிக்கிறார்கள். இதனை அடுத்து இருப்பதுதான் பதினாறிதழ்த் தாமரையாகிய சர்வஆசாபரிபூரகம் என்னும் சக்ரம். இதில் காமாகர்ஷணி முதலிய பதினாறு சத்திகள் வசிக்கிறார்கள். இவர்க்கு குப்தயோகினிகள் என்று பெயர். இவ்வண்ணம் தாடங்கம் பராசக்தியும் சூழஉள்ள ஆவரண சக்தியுமாக விளங்குவதை ஸ்ரீவித்யா உபாசகர்கள் அறிவார்கள். ஸ்ரீசக்கரமே மந்தரசொரூபம். ஸ்ரீவித்தை ஒன்றுதான் இருமைப் பயனையும் அளிப்பது. இந்த வடிவமான தாடங்கம் 6—2—54 வெள்ளிக்கிழமை அன்று அபிராமி அம்பாளுக்குத் தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் அணிவிக்கப்பெற்றது.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-௵ மாசி-௴ 1-௳ முதல் 30-௳ முடிய)
(12—2—54 முதல் 13—3—54 முடிய)

## 1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

மேஷராசி பலன் சுபமாகவே நடக்கும். மத்தியில் அசுவதி காரர்கள் மாத்திரம் பத்துதினங்களில் கவலையடைவார்கள். பரணி 1-2 பாதமுள்ளவர்கள் மாதமுதலிலும் கடைசியிலும் விசேஷ லாபத்தையும் மங்களத்தையும் அடைவார்கள். பரணி 3, 4 பாதமுடையவர்கள் அதிகமான உழைப்பின்பேரிலும் அடிக்கடி சஞ்சாரவசத்தாலும், அதிகமான மனக்கவலையாலும், பாதிக்கப்படுவார்கள். கார்த்திகை முதல்பாதம் சம்பந்தப்பட்ட மேஷராசிபலன் எங்கும் கீர்த்தியையும் சௌக்கியத்தையும் தரும். ஆனால் பெரியோர் அன்பும் செய்நன்றியும் ஓடிவிடும். ஷை ராசிக்காரர்கள் எல்லோருமே ஆஸ்திகத்தோடும் செய் நன்றியோடும், அன்பர்களாகவும் நடந்துகொண்டால் விசேஷ மாகச் சுபங்களையே அடையலாம். சனி, புதன் மத்திமம். வியாழன் நலன் தரும்.

## 2. விருஷபம்: கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை நக்ஷத்திர விருக்ஷபராசி பலன் வியாதி சாந்தி யாகும். கடன்நீங்கும், தொழில் ஓங்கும். மனம் சாந்தியடையும். ரோஹினி நக்ஷத்திரம் முதல் இரண்டு பாதங்கள் சில அற்புதங் களை அனுபவிக்கும். மூன்று நான்கு பாதக்காரர்கள் சஞ்சா ரத்தால் நலனடைவார்கள். மிருகசிரிஷம் முதல் இரண்டு பாதம் சம்பந்தப்பட்ட விருஷபராசி பலன் தெய்வபலத்தைத் தந்து உலகில் பிரபல்யத்தைக் கொடுக்கும். தொழில் ஓங்கும், நலன் கிட்டும். புதன் வெள்ளி சுபமாகும்.

## 3. மிதுனம்: மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசிரிஷமும் திருவாதிரையும் உலகில் நன்மையான காரியங்களைச் செய்து நலன் உண்டாக்கச்செய்யும். தெய்வபலம் கிட்டும். தொழில் ஓங்கும், மேலோர் பெரியோர் சிநேஹம் கிட்டும், புனர்பூசம் சம்பந்தப்பட்ட மிதுனராசி பலன் அசு பத்தையும் புத்திரர்களால் தொல்லையையும் விவசாயத்தால் பலன் குறைவையும், தொழிலாளர் தொல்லைகளையும் வியாதி பயத்தையும் தரும். தெய்வபலம் இராது. நாஸ்திகத்தன்மை யும் பெரியோர் சாபமும். கிட்டும் மனம் சதா சஞ்சலமடையும். காரியங்களில் வெற்றி இராது. தெய்வபலத்தை நாடுவோர் நலனடையலாம். வெள்ளி சனி சுபமாகும்.

271



4. **கடகம்:** புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் நாலாம் பாதமும் பூசமும் அமங்களத்தையே தரும். குடும்பம் வேறுபாடாகும், வீண் செலவுகள் ஏற்படும். விவஹாரமுண்டாகும். தீராத நோய்வரும், தொழில் குறை ஏற்படும். விவசாயம் நஷ்டமடையும். ஆயில்யநக்ஷத்திர கடக பலன், பூர்ணமான தெய்வ பலத்தைத்தந்து பெரிய கஷ்டங்களி லிருந்து விடுதலையடையும். குடும்பம் ஓங்கும். மேலோர் பெரியோர் நேசமும் ஆசியும் கிட்டும். விவசாயம் லாபத்தைத் தரும். மனம் சாந்தியடையும், புதன் வெள்ளி சுபத்தைத்தரும்.

5. **ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகம் பூரம் இருநக்ஷத்திர பலனும் நன்மையாகவேநடக்கும். வியாபாரம் ஓங்கும், தொழிலாளிகள் லாபமடைவார்கள். உத்யோகலாபம் கிடைக்கும். விவஹாரம் ஜயிக்கும். உத்திரம் முதல் பாதம் மிசிரமாய் நடக்கும். புதனும் வியாழனும் சுபமாகும்.

6. **கன்னி:** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

ஷை கன்னியாராசி சம்பந்தப்பட்ட மூன்று நக்ஷத்திர பலனும் மிகவும் சுபமாகவே இருக்கும். உத்தியோகஸ்தர்கள் பிரமோஷன் அடைவார்கள். தொழிலாளிகள் லாபத்தோடு சந்தோஷமடைவார்கள். வியாபாரிகள் லாபமடைவார்கள், ஹஸ்தநக்ஷத்திரம் முதல் இரண்டு பாதமுடையவர்கள் ரொம்ப கவலையையும், தொழில் நஷ்டத்தையும், குடும்பத் தொல்லை யையும், கவலையான காரியங்களில் தலையிட்டுக்கொண்டு சிரமத் தையும் அடைவார்கள். ஆனாலும் சுபமேயாகும். ஹஸ்தம் மூன்று நான்கு பாதமுடையவர்கள் எடுத்த காரியத்தில் வெற்றி யடைதலையும் நூதனமான ஸ்திர காரியங்களையும் அடையச் செய்து, தொழில் மூலமாயும் விவசாயமூலமாயும் உத்யோக மூலமாயும் சுக லாபங்களையே அடைவார்கள். ஆனால் எவ்வளவு லாபம் கிடைத்தாலும் வரவுக்கு மிஞ்சியே செலவினங்களும் ஏற்படும். குருவாரம் சுக்கிரவாரம் வெற்றியைத்தரும்.

7. **துலாம்:** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை சுவாதி சம்பந்தப்பட்ட துலாராசி பலன் சென்ற மாதம்போலவே நடப்பதோடு, தெய்வபலம் கிடைத்து ஞானம் ஏற்படும், ஆத்மார்த்தமான சர்வசித்திகளும் சுலபமாய்க்கிட்டும். தொழிலாளிகள், வியாபாரிகள், மிராசுதார்கள், வித்வான்கள், உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் கஷ்டத்திலிருந்து விடு பட்டு பூரண சந்திரனைப்போல் பிரகாசிப்பார்கள். விசாகம்

முழுதும் நேர் விரோதமாகவே நடக்கும். எதிலும் அபஜயங்களும் நஷ்டங்களுமே உண்டாகும். சனிவாரம் சுபமாகும்.

8. **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் நாலாம்பாதம் சென்ற மாதம்போலவே தான் இருக்கும். விசேஷமாய் வியாதியையும்தரும். ரொம்ப ஜாக்கிரதையாய் இருப்பது நலம். அனுஷம் முன்னரை முதல் இரண்டு பாதங்கள் மாதம் முற்பாதியில் சகல சித்திகளையும் கொடுத்து பிற்பாதியில் கஷ்டநஷ்டங்களைக் கொடுக்கும். கேட்டை நான்கு பாதங்களும் சுபசந்தோஷத்தைத் தரும். காரியசித்தி தனலாபம் மங்கள காரியங்கள் பெரியோர் மேலோர் அன்பு முதலிய நன்மைகள் விசேஷமாய் அடையச்செய்யும். புதன் வியாழன் சுபமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலநக்ஷத்திரம் நான்கு பாதங்களும் தொல்லைகளோடு ஓடும். பூராடம் தெய்வபலத்தால் கஷ்டங்கள் நீங்கி சந்தோஷம் தரும். உத்திராடம் முதல்பாதம் சுபமாகவும் சந்தோஷமாகவும் நடக்கும். பொதுவாக தனுர்ராசி பலன் சகலவிதமான மனிதர்களுக்கும் ஷை மாதம் சுபமாகவே நடந்துகொண்டிருக்கும். வெள்ளி சனி நலன் தரும்.

10. **மகரம்:** உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

உத்திராடம் சம்பந்தப்பட்ட மகரராசி பலன் மிசிரமாய் நடக்கும். திருவோணம் நான்கு பாதங்களும் அவிட்டம் முன் இரண்டு பாதங்களும் சந்தோஷத்தைத்தரும். தொழில்மூலமான லாபம் விவஹார ஜயம் கீர்த்திபத்திரம் கிடைத்தல். வியாபார மேன்மை, கூட்டாளிசேருதல், தெய்வபலம் பிரகாசித்தல், பெரியோர் அன்பு முதலிய சுபங்கள் ஏற்படும். புதன் வியாழன் சனி நலன்காட்டும்.

11. **கும்பம்:** அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டம் பின்னரை கவலையோடும் குடும்ப சிரமங்களோடும் ஓடிக்கொண்டிருக்கும். சதயம் மிசிரமாய் நடக்கும். தூரயாத்திரை அதிக செலவுகள் தொழில்மந்தம் இவைகளைத் தரும். பூரட்டாதி மூன்று பாதங்களும் சுகத்தைக் கொடுக்கும். உல்லாச யாத்திரை பந்துமித்ராளுடைய சேர்க்கை, தனதான்ய விருத்தி, சுபசோபனுதி மங்கள காரிய பிரவிருத்தி. தொழில் மூலம் லாபம், நஷ்டதன பிராப்தி. தெய்வசக்தி ஓங்கல் நினைத்த

தெல்லாம் நடத்தல், சந்தோஷம் இவைகளைத் தரும். புதன், வியாழன், வெள்ளி சுபமாகும்.

12. **மீனம்:** பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி நான்காம் பாதம் சென்ற மாதம்போலவே நடப்பதோடு. அதிகப்படியான கஷ்ட நஷ்டங்களைப் பலவிதத்திலும் உண்டுபண்ணும் உத்திரட்டாதி நான்கு பாதமும் மிசிரமாய் ஓடிக்கொண்டிருக்கும். ரேவதி முதல்பாதம் அதிக சிரமத்தைப் பலவிதத்திலும் அடைவதோடு, உத்யோகபங்கம் வியாபாரியாகில் பெருத்த நஷ்டம். மானபங்கம் இவைகளைத் தரும், ரேவதி 2, 3, 4 பாதங்கள் மனநிம்மதி இல்லாமலும் கவலையோடும் ஓடிக்கொண்டிருக்கும். ஆனால் முடிவில் தெய்வ பலம் முன்னின்று காப்பாற்றும். சந்தோஷத்தையும் நஷ்டதன வரத்தையும், சுபத்தையும் தந்து லோகாபவாதத்தையும் மாற்றும், புதன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு:- தின வாரப்படி கோசார பலன்களைப்பற்றி சில பத்திரிகைகள் சந்தேகம் தெரிவித்திருப்பதற்குச் சமாதானம்.

தினபலன், வாரபலன், பக்ஷபலன், கோசாரப்படி பலன் சரியாய்த் தருவதில்லை அதைநம்பி ஸ்திர காரியங்களும் தினசரி வாழ்க்கையும் நடத்தமுடியாது. மாதகோசாரம் சௌரசாந்திர மாத பிரவேசகால லக்கினத்தைப் பொருத்து நக்ஷத்திர பாத சஞ்சாரமூலம் மேஷாதி ராசிபலன்கள் நடைபெறுமாதலால் தசாபுக்தி பலன்களையும் சிலசமயம் அதிக்கிரமித்து சுபாசுபத்தை தரும். மாத கோசார பலன் சுபமாய் இருக்கும்போது தசாபுக்தி பலனும் சுபமாய் நடப்பவர்களுக்கு எல்லாம் பூர்ண சுபமாகவே நடக்கும். கோசாரம் கெடுதலாகி தசாபுத்தி நல்லதானால் மிசிரமாய் நடக்கும். இரண்டும் கெடுதலானால் பூர்ண அசுப பலனே நடக்கும். ஆனால் ஷை மாத கோசாரபலன் தின வார பக்ஷம்போல் வீணாகிறதில்லை. கோசார பலன்கள்மூலம் எதிர் காலம் அறிய வேண்டியவர்கள் அவசியம் நேரிட்ட காலத்தில் பிரசின்மூலமாகவே நேரில் மூன்றுகாலமும் அறிந்த பெரியோர் களிடம் சென்று அறிந்துகொண்டு நடப்பது பூரண வெற்றியைத்தரும். கோசாரபலன் உலகில் மஹாஜனங்களின் புண்ணிய பாபத்துக்குத் தக்கபடி சஞ்சாரம் ஏற்பட்டு எதிர்காலத்தை ஆன்மாக்களுக்குத் தெரியப்படுத்தும்.

# A Hymn from Tiruvachakam

[The student of Thiruvachakam, while he familiarises himself with the sweetness and music and easy flow of the words by his daily recitation of the Hymns, will soon begin to notice in rather big and pretty type, just under the title of the hymn, certain phrases which for long seemed to us to have no sort of bearing on it. Teachers could either not be found to explain the meaning of these words, or if found rarely, they could not be induced to impart what they consider a holy secret. But with the study of the Siddhanta Philosophy, especially of that One Supreme book *Sivagnanabotham*, the mists slowly begin to get dispelled, and we fancy we begin to see a meaning and a connection. Following the lead of these words, which are called technically "திருவுள்ளக்கிடை," "The hidden meaning," the credit of adding which is assigned by tradition generally to Saint Umapathi Sivacharya, we have tried to analyse the hymns in several cases with some success. But we cannot claim to this, either absolute correctness or authority, and ours is merely an effort, and it is sincerely hoped that others who are better advanced and able to see the inner meaning will give the benefit of their knowledge to the public. – Editor]

The திருவுள்ளக்கிடை prefixed to the Hymn on 'The House of God,' so beautifully translated by Mr. P. A., and published in these pages is 'அநுபோக இலக்கணம்,' the 'Lakshana of Highest experience,' 'Anubhuti,' and as it will be folly to assume any such knowledge or experience, on our part, we leave this alone; but our purpose in mentioning it is solely to draw particular attention to the fact, how appropriate is the title to this foremost of Manickavachaka's hymns. The purport of 'Pilgrims progress,' போற்றித் திருவகவல்' is given as 'சகத்தின் உற்பத்தி', 'Starting of the world's creation', which meaning is more brought out by Mr. P. A. in his English Title, 'Pilgrims Progress,' than in the more mysterious Tamil title. The morning Hymn,

275



திருப்பள்ளியெழுச்சி' deals with 'திரோதனசுத்தி,' the vanishing night, the night which gave us rest and recouped our strength, and the call is to the awakening soul to use his renewed energies aright, in the path of salvation, and thus realize the high purpose for which we are allowed to be born in this earth, by the extreme Grace of the Supreme Siva, "இந்தப்பூமி சிவனுய்யக்கொள்கின்றவா றென்று." We propose however to devote this paper more fully for an analysis of the Hynn entitled, திருப்பூவல்லி "The beautiful Lily flower. As in most of his other hymns, where the Saint throws his own words into the mouth of babes, young lads and lasses, who on play intent, proceed to gather flowers, roam about gardens to hear the (குயில்) *Kuyil* sing, and to send love messages through parrots and swans, to put up swings on trees, to pick limes for அம்மானை, and form themselves in groups for தும்பி, so in this, one calls to his playmates to cull flowers for laying them at the Feet of the Lord. And this, as an action commended to the *Kiryavan* (கிரியாவான்), the planting of flowers, and rearing them and gathering and making garlands for the service of the Most High, is in itself the most innocent, and pious and holy occupation a devout soul can aspire for, fully engaging his physical and emotional and intellectual faculties. But as everything on this earth, can be used or absued, so, do we not know, how 'this thing of beauty and joy for ever,' is prostituted to serve man's grosser passions and immoral purposes. Several millions worth of the choicest flowers are sold in the market of London alone; what for? not all for laying at the feet of God, but on the bosom of Man. Man is the divinity of the present age, and not God. He is indeed the Divinity proclaimed alike by the philosopher and the poet, and the layman, and there are no warring sects and creeds among such fraternity. A noble brotherhood indeed! To ignore, and dethrone God, and elevate Man to this Highest Pedestal is the noble aspiration of the Present generation. With them, the notion of God is a mere myth, a figment of the Degenerate Man, or an hoax and lie invented by sharpers

for their own benefit. And the sooner man releases himself from this bond, the sooner will he releases himself from all sorrow and misery and death! We would wish them God-speed, in their work, but as they have no God, we will leave them to achieve their hearts' desire, as best as they can. But their ways are clearly not ours; though our object be the same, a throughly loving and eternally happy and united and perfected brotherhood, in this life and in the life to come. Returning from this digression, we proceed to lay here the purport of this piece which is given as 'Maya Vijia Ninguthal', 'மாயாவிஜய நீங்குதல்', 'Release from the conquest of Maya.' Why of all flowers, the lily should here be taken as a symbol, when there are more beautiful and more fragrant flowers, should occupy our attention first. In the lily and the lotus (they are of the same species), the Buddhist found his highest symbol, 'Om Mami Padma Hum,' as typical of this world's expansion. and dissolution, 'quest and conquest.' But this is an older Hindu symbol also. And Saint Manickavachaka has chosen the words denoting the humbler species, instead of Padma with a set purpose. The word பூவல்லி can be split up into பூ+அல்+இ, which mean respectively otherwise as (பூமி= world)+(இருள்=darkness+(the negative of these), and the whole phrase gives as such. the esoteric meaning 'Release from the dark world of Maya' The chorus in each verse 'பூவல்லிக்கொய்யாமோ', 'Pluck away the dark world' brings out the sense more particularly also. And as we have elsewhere pointed out, that this darkness can only vanish, when the Light dawns on the horizon, the hymn begins with "இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலும் துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தோம்." "by the placing of the gracious Lotus Feet on my head. my bonds are released." The nature of this bond, Pasa Maya is more fully defined in that, it consists in the idea of 'Me and mine', the idea of self and selfishness, the root of all evil The next verse states a further inducement for the worship of the Most Supreme, by means of a comparison. God lives in the honeycomb buried in the heart of the Marutha tree

referring to the shrine of திருவிடைமருதூர் (Thiruvidaimaruthur), and the suggestion is that instead of our vain quest after the little honey contained in each flower, பு (world) sensual and transitory enjoyments without ever quenching our thirst, if we go to the honeycomb itself, we will drink the Divine Joy to our hearts' content. To the questions, is not man himself great, why should he give up himself and others who are nearest and dearest to his heart, his own mother, his own father &c., the next verse answers by saying, that we are nothing but the dust of the earth in His Presence, 'much inferior to the much despised dog,' and as such though, we deserve to be spurned, the Lord who, in His Love and Grace to us, is much superior to our own mother, who has her own favourites among her children, is extremely solicitious and ever intent on our salvation. And unlike our own fond mother who is so weak that she cannot minister to our smallest ills, our Lord is able to heal us from our hardest ill of birth and death. The next verse gives instances of Daksha the first son born, and Sun and other gods, who asserting their Egoism in opposition to the Will of the Supreme were immediately and sharply overtaken by misery and sorrow and disgrace. The next verse says, 'search and you will find Him in yourself. Cry for him, with all your heart and soul, and as the mother who answers the cry of her babe, He will run to your help.' The next verse contains instances, where to such cry for help, he rendered immediate help? 'This *One*, who manifested himself as the *Three* has given you a body and other organs (out of Maya) only as a means of your salvation So use this for their best. With your head, bow down to Him. With your mouth praise his Victorious Foot. Join the Society of His Bhaktas, learning by example and by precept,' is the import of the 7th verse. 'Love Him and His devotees and your Karma will sure be destroyed' says the next verse. 9th and 10th verses are devoted to show the way by which God manifests His Grace, and the Hymn closes with one or two instances of His Manifestation and Grace which are so difficult for man, and yet easy enough for Him, namely, His swallowing the fearful poison, and His burning the *Thripura*.

—*Siddhanta Deepika.*

278

## தென்னிந்தியகோயிற் சாசனங்கள்

விலை ரூ. 18—8—0. அரசாங்க கையெழுத்துப் புத்தகசாலை, சென்னை. எழுதியவர்:- தி. ந. சுப்பிரமணியம் அவர்கள், குன்றக்குடி. ஆதீன தேவஸ்தானக் கல்வெட்டாராய்ச்சியாளர்.

இதில், தென்ஆற்காடு வடஆற்காடு முதலிய ஐந்து ஜில்லாக்களில் உள்ள எண்பத்துநான்கு ஊர்களின் கல்வெட்டுக்கள் குறிக்கப் பெற்றுள்ளன. கல்வெட்டுக்களின் முழுக்குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கல்வெட்டுக்களினடியிலும், அந்தந்தகல்வெட்டுக்கள் இருக்குமிடம் முதலியன ஆங்கிலத்தில் விளக்கப்பெற்றுள்ளன. சரித்திர நுணுக்கங்களை ஆராய்பவர்களுக்கு இவ்வெளியீடு மிகமிக இன்றியமையாதது. கல்வெட்டுக்களிலுள்ள ஐயப்பாடான பகுதிகளுக்கு ஆசிரியர் கீழ்க்குறிப்பில் திருத்தமும் விளக்கமும் கொடுத்திருக்கிறார். இத்துறையில் திரு. தி. ந. சுப்பிரமணியம் அவர்கள் சிறந்த அறிவுடையவர் என்பதை எடுத்துக்காட்டுவது இவ்வெளியீடு.

## திருக்குறள் உரைவிளக்கம்

விலை ரூ. 5—0—0. ஆசிரியர் ஜி. வரதராஜன் B. A., திருவள்ளுவர் நிலையம், புத்தூர், திருச்சிராப்பள்ளி.

இவ்வுரையும் விளக்கமும் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கிடைத்த வரப்பிரசாதம். தெளிவு உள்ள இடத்தில் களிப்புப் பிறப்பது இயற்கை. இதுவரை திருக்குறளுக்கு எத்தனையோ உரைகள் வந்துள்ளன. எல்லாவற்றிலும் இது சிறந்தது என்பதனை அங்கங்கே படித்து அறிந்துகொள்ளநேர்ந்தது. புத்துரை காணும் முயற்சியால் இக்காலத்துப் பலர் பழைய கருத்துக்கள் எத்தனைச் சிறந்தனவாயினும் அவற்றை எடுத்துப் புதுமையிலேயே மோகங்கொண்டு மனம்போனவாறு உரைப்பர். இது அங்ஙனம் இல்லாமை அறிந்து இன்புறற்குரியது; சிறந்த வெளியீடு.

## ஜன்மநக்ஷத்திரத் திருநாள்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 2—1—54 அன்று திருநன்னிலத்துப்பெருங்கோயில் ஸ்ரீ மதுவனேசுவர சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

## அரிய வாய்ப்பு

இசையரசு, திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களின் தேவார இசைத்தட்டுக்கள் செட் ஒன்றுக்கு 10 ரிகார்டுகள். தயாரிப்பாளர்: கிராமபோன் கம்பெனி லிமிடெட். இதன் விலை ரூ. 40-10-0. தபால் செலவு வகையரு தனி.

கிடைக்குமிடம் :- காஷியர், ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி, தஞ்சைஜில்லா.

## தருமபுர ஆதீனத் திருமுறை வெளியீடுகள்

| | விலை | தபாற்செலவு |
|---|---|---|
| திருஞானசம்பந்தர் முதல் திருமுறை | ரூ. 3—8—0. | ரூ. 1—5—0. |
| டிம்மி 1 × 8 சைஸ் பக்கங்கள் 768. | | |
| திருவாசகம் | ரூ. 2—8—0. | ரூ. 0-11—0. |
| கிரௌன் 1 × 16 சைஸ் பக்கங்கள் 420. | | |

குறிப்புரை, தல விசேஷக் குறிப்புகள் முதலிய பகுதிகள் கொண்டது. வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்குமிடங்கள் :—

டிரஷரர், வேளூர் தேவஸ்தானம், வைத்தீஸ்வரன்கோயில்.

காஷியர், ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

காஷியர், ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

காஷியர், ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram (Mayuram). 10—2—1954.